
IIIT

# முஸ்லிம் பெண்களும் ஹிஜாபும்

## ஒரு மீள்பார்வை

### வரலாற்று மற்றும் நவீன கருத்துப் படிவங்கள் மீதான சவால்




கெதரீன் புல்லொக்

# முஸ்லிம் பெண்களும் ஹிஜாபும்

## ஒரு மீள்பார்வை

வரலாற்று மற்றும் நவீன கருத்துப்படிவங்கள் மீதான சவால்


கெதரீன் புல்லொக்

தமிழில்:
நாவல் நகர் ஏ. ஆர். எம். முபாரக்

செம்மையாக்கம்:
ஸி(Z)க்ரா அலி

Muslim Pengalum Hijabum - Oru Meelparvai

Varalatru Matrum Naveena karuththuppadivangal Meethana Savaal

Tamil edition of

# Rethinking Muslim Women and The Veil

Challenging Historical & Modern Stereotypes

By Katherine Bullock

Published by
THE INTERNATIONAL INSTITUTE OF ISLAMIC THOUGHT
P.O.Box 669, Herndon, VA 20172, USA
www.iiit.org
London Office
P.O.Box 126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

ISBN 978-955-8398-27-2

Tamil edition ● Translation by ARM Mubarak ●
Edited by Zikra Ali ● Published by *Fuzin Texts*
23/3 Market Road, Dharga Town 12090 Sri-Lanka ●
Printed by Millennium Graphics, Maharagama

© Abd al-Jabbar Muhammad Zaneer (2018)

# பதிப்புரை

*இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்* (International Institute of Islamic Thought - IIIT) *தனது பிரதான வெளியீடுகளின் சுருக்கத் தொடர் வரிசை ஒன்றனை ஆரம்பித்துள்ளது. இவை மூல நூலின் உள்ளடக்கங்களது கருப்பொருளை வாசகர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் சுருக்கமாக எழுதப்பட்டவை.. அடக்கமான பதிப்பில் வாசிப்புக்கு எளிதாகவும் நேரத்தை சேமிக்கும் வகையிலும் இவை வெளியிடப்படுகின்றன.*

*இவற்றுள், அஹ்மத்-எஸ்ஸா-உத்மான அலி ஆகியோரின்* **இஸ்லாமிய நாகரிகம்**, *இஸ்ரார் அஹ்மத் கான் எழுதிய* **ஹதீஸின் ஆதாரபூர்வத் தன்மை**, *தாஹா ஜாபிர் அல் - அல்வானியின்* **இஸ்லாத்தில் மதம் மாறுதல்** *ஆகியவற்றை நாம் தமிழில் ஏற்கனவே வெளியிட்டுள்ளோம்.*

*'முஸ்லிம் பெண்களும் ஹிஜாபும் - ஒரு மீள்பார்வை' என்ற தலைப்பில் மிக நுணுக்கமாகவும் ஆழமாகவும் ஆய்ந்து எழுதப்பட்டுள்ள பாரியதொரு வெளியீட்டின் சுருக்க வடிவத்தை இப்போது நாம் வழங்குகின்றோம். மூல நூலின் விரிவான ஆய்வுப் பயணத்திற்கு வாசகர்களை இட்டுச் செல்ல இது தூண்டு கோலாக அமையலாம் என்பது எமது நம்பிக்கை.*

*இந்த ஆய்வு நூலின் பூரண வடிவிலான முதல் பதிப்பு* IIIT *யினால் 2002-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. மீள் பிரசுரங்களுக்குள்ளான இந்த நூல் பல்வேறு மொழிகளில் பெயர்ப்புச் செய்யப் பட்டுள்ளது. 'ஹிஜாப் ஆனது முஸ்லிம் பெண்களது அடக்குமுறையின் சின்னம்' என்ற மேற்குலகின் வழமையான கோஷத்திற்குத் தகுந்த பதிலடி கொடுக்கும் வலிமை வாய்ந்த அறிவு பூர்வமான திறனாய்வாகும் இது. அந்தப்புரப் பெண்கள் பற்றிய மூட எண்ணங்கள், காலனித்துவ அம்சங்கள் உட்பட ஹிஜாப் பற்றிய மேற்குலகின் வரலாற்று ரீதியான புனைகதை களையும் ஆசிரியர் பரிசீலனைக்கு உட்படுத்துகிறார்.*

*இந் நூலாசிரியை இஸ்லாத்தில் இணைந்து கொண்டது தனது கலாநிதிப் பட்டத்துக்கான மாணவியாய் இருந்த போது. மதம் மாறிய வேளை சமூகம் எழுப்பிய எதிரலைகளின் காரணமாக*

*ஆய்வுக்கென அவர் தேர்ந்திருந்த தலைப்பை விடுத்து ஹிஜாப் பற்றிய ஆய்வைத் தேர்ந்து தனது கலாநிதிப் பட்டத்தையும் ஈட்டிக் கொண்டார்.*

*கலாநிதி* Katherine Bullock *இன் இந்த ஆக்கம், மேற்குலகில் பாரிய அரசியல் பிரச்சினையாகிவிட்ட ஹிஜாப் தொடர்பான எந்த ஓர் ஆய்வுக்கும் அல்லது விவாதத்திற்கும் முக்கியமான பின்னணியை அமைத்துக் கொடுக்கின்றது.*

*ஆங்கிலப் பதிப்பிலான அடிக்குறிப்புகளின் நிரலைப் பிரதி செய்து இதில் இணைத்துள்ளோம்.*

*இந்த நூலின் பொருள் குறித்து மேலதிக விவரங்கள் பெற விழைவோர், பூரண வடிவிலான ஆங்கில மூல நூலை அணுகலாம்.*

*தமிழிலான இந்த சுருக்க நூலைக் கணணிப் பதிவு செய்ததுடன் அச்சுக்காகச் செப்பம் செய்தும் தந்தவர் ஹாபிஸ் இஸ்ஸதீன். அட்டையை வடிவமைப்புச் செய்தவர் மீரா லெப்பே முஹம்மத் ரஸீன். பதிப்புக்கான ஒத்தாசைகளை வழங்கியவர்அஸார் வஸீர். மூவருக்கும் எமது நன்றிகள்.*

*ஜனவரி 2018* FUZIN TEXTS

**வாசகர் கடன்**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும்
போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்
(அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது
அருளப்படுவதாக) எனவும், அண்ணலாரின் தோழர்கள் யாரும்
குறிப்பிடப்படும்போது ரழியல்லாஹு அன்ஹு (அன்ஹா,
அன்ஹும்) (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக)
எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள்
குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது
அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.

# முஸ்லிம் பெண்களும் ஹிஜாபும் - ஒரு மீள்பார்வை

## *வரலாற்று ரீதியான, நவீன மாறாத்தன்மைகளுக்கு ஒரு சவால்*

### *அறிமுகம்*

*1991ம் வருடம் தொலைக்காட்சியில் ஒரு செய்தி: துருக்கிய பெண்கள் மீண்டும் ஹிஜாபின் பக்கம் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். அதிர்ச்சிக்குள்ளான நான் அத்துர்ப்பாக்கிய துருக்கியப் பெண்களுக்காக கவலைப்பட்டேன். தங்கள் கலாச்சாரத்தினால் அவர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கின்றார்கள் என அனுதாபப்பட்டேன். இஸ்லாம் பெண்களை அடக்குமுறைக்கு ஆளாக்கியுள்ளது; அதன் ஓர் அடையாளமே ஹிஜாப் என நம்பும் ஏராளமான மேலை நாட்டவர்கள் போலவே நானும் நம்பினேன்.*

*நான்கு வருடங்கள் கழிந்துவிட்டன. பாதையோரக் காட்சியறையொன்றன் கண்ணாடியில் எனது பிம்பத்தை நானே காண்கிறேன். என்ன ஆச்சரியம்! அடக்குமுறைக்கு ஆளான அந்தத் துருக்கியப் பெண்களைப் போலவே நானும் ஆடை அணிந்திருந்தேன்.*

*எனது முதுமானிப் பட்டப் படிப்பின் போது, ஆன்மீகத் தேட்டமொன்றில் ஆழ்ந்திருந்தேன் நான். நான்கு வருடங்களின் இறுதியில் அந்தத் தேட்டம் என்னை இஸ்லாத்தின்பால் கொண்டு சேர்த்ததுடன் அமைதி அடைந்தது.*

*இஸ்லாம் குறித்துக் காழ்ப்புணர்வு கொண்டிருந்தவள் நான். இப்போதோ அது ஏற்புக்குரியதாக, கௌரவத்துக்குரியதாக, மேன்மேலும் ஆவலைத் தூண்டுவதாக ஆகிவிட்டது. என்றாலும் ஒரு பெண் என்ற ரீதியில், இயல்பாகவே, ஹிஜாப் இன்னமும் விவகாரத்துக்குரிய ஒரு விடயமாகவே என்னுள் இருந்து வந்தது.*

*இஸ்லாத்தின் இறையியல் கோட்பாடுகளினால் நான் ஆகர்ஷிக்கப்பட்டிருந்தேன். என்றாலும்கூட முஸ்லிம் சமூகத்தில் பெண்களுக்கான கொடூரங்கள் என நான் நம்பியிருந்த சில பழக்க வழக்கங்களையிட்டு ஆழ்ந்த குழப்பத்துக்குள்ளாகியிருந்தேன்.*

*ஹிஜாப் என்பது கலாச்சாரப் பாரம்பரிய வழியாக வந்த ஒன்று. அதனை அழித்துவிட முஸ்லிம் பெண்கள் நிச்சயம் செயல்படலாம் என்றே நான் கருதினேன்.*

*குர்ஆனீய வாசகங்கள் பல காட்டப் பெற்றேன் நான். ஆண்களும் பெண்களும் தங்களது அங்கங்களை மறைக்க வேண்டுவதை அறிவுறுத்துவனவாக அவை அமைந்தன. அவ்வாறாயின் நிச்சயமாக அந்த வாசகங்கள் அங்க மறைவு செய்தலைக் கட்டளையாகவே அமைத்துள்ளன. முஸ்லிம் பெண்களுக்காக அனுதாபமும் கவலையும் கொண்டவளாகவே நான் வீடு திரும்பினேன். அக்குர்ஆனீய வாசகங்கள் தெளிவானவை. ஆகவே அவர்களுக்கு மாற்று வழி ஏதும் இல்லை. விசுவாசியான ஒரு முஸ்லிம் பெண், நிச்சயமாக தனது அங்கங்களை மறைத்தே ஆக வேண்டும்.*

*எவ்வாறாயினும் இந்த விவகாரங்களை நான் ஒதுக்கி வைக்க வேண்டியிருந்தது. என் முன்னே இருந்த முக்கிய பிரச்சினை நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பது தான். இறுதியில் நான் கருத்தில் கொண்டது மதத்தின் அடிப்படை இறையியல் கோட்பாடு மட்டுமே: 'இறைவன் ஒருவனே, முஹம்மத் (ஸல்), அவனது அடியாரும் தூதரும் ஆவார்'. பல வருட கால ஆய்வின் பின்னரும் இந்த அடிப்படைக் கோட்பாடு குறித்து எவ்வித சந்தேகமும் ஏற்படவில்லை. என்றாலும் ... என்றாலும்... .இஸ்லாத்தில் பெண்களின் நிலைமை பற்றிய விவகாரம் மாத்திரம் நெருடல் செய்து கொண்டிருந்தது.*

*1994 ஜூலை மாதம், எனது கலாநிதிப் பட்டத்துக்கான கல்வி நெறியில் ஒன்றரை வருட காலம் ஆகிவிட்டது. அவ்வேளையிலேயே என்னை இஸ்லாத்தின் உள்ளாக்கிக் கொள்ளும் தீர்மானத்தை எடுத்து விட்டேன். அத்துடன் நான் விரும்பினேனோ இல்லையோ, எனது அங்கங்களை மறைத்துக்கொள்ளவும் முடிவெடுத்தேன். அது ஒரு குர்ஆனீய கட்டளை. அதற்கு நான் அடிபணிந்தே ஆக வேண்டும்.*

*எனது துறையில் பணியாற்றி வந்த சிலரிடம் நான் இஸ்லாத்தின் உள்ளாகிவிட்டமையைக் கூறி வைத்தேன். அடுத்த முறை அவர்கள் என்னை ஹிஜாபில்தான் காண்பார்கள் எனவும் எச்சரிக்கை செய்தேன். அவர்கள் ஆச்சரியத்துக்குள்ளானார்கள். செய்தி பரவிய வேளை, அதுவும் புதிய ஆடையில் அவர்கள் என்னைக் கண்டபோது பலரும் விரோதம் பாராட்டும் வகை*

யிலேயே என்னுடன் நடந்து கொண்டார்கள். கடும் போக்குப் பெண்ணியவாதியாக அறியப்பட்டிருந்த நான், அடக்குமுறையின் அடையாளமான இந்த ஆடையை எப்படி அணியலாம்? ஹமாஸ் அண்மையில் இழைத்திருந்த கொடூரங்கள் நான் அறியாதனவா? அண்மையில்தான் முஸ்லிம் ஆடவன் ஒருவன் முஸ்லிம் பெண்ணொருத்திக்குச் செய்திருந்த அட்டூழியங்களை நான் காணவில்லையா?

என் மீது காட்டப்பட்ட விரோத மனப்பாங்கை எதிர்கொள்ள நான் தயாராக இருக்கவில்லை. மிகவும் சுமுகமாக அன்றாடம் என்னுடன் பழகிவந்த பலரும் - இலாகா செயலாளர்கள், துறை அதிகாரிகள், மருத்துவத் துறையினர், போக்குவரத்தின்போது எதிர்ப்படும் சக பிரயாணிகள் என அனைவருமே - என்னை வித்தியாசமான முறையில் நடத்துவதாகவே நான் உணர்ந்தேன். நான் இழிவாக நடாத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் பல. இதுவரை காலமும் போல, சாதாரண, வெள்ளை நிற, மத்தியதர மாதுவாக நான் மதிக்கப்படுவதாகத் தெரியவில்லை. பாகுபாடு, இனத் துவேஷம் என்பன பற்றிய எனது முதல் அனுபவமாக இது அமைந்தது. இதுவரை காலமும் நான் அனுபவித்து வந்த உயரிய, கௌரவமான அந்தஸ்து எத்தகையது என நான் அறிந்திருக்கவில்லை போலத் தோற்றியது.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதனால் பரந்துபட்ட சமூகத்திலிருந்து நான் எதிர்கொள்ள வேண்டியிருந்த பிரச்சினைகள் குறித்து உரையாடிய வேளைகளில் எனது புதிய முஸ்லிம் தோழியர் எனக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினார்கள். அவர்களுள் சிலர் அண்மையில்தான் இஸ்லாத்தின் பாலாகியிருந்தார்கள். இவர்கள் எல்லோரும் புதிய சூழலிலான தாக்கங்களை எவ்வாறு சமாளித்தார்கள் என ஆச்சர்யப்பட்டேன். டொரண்டோ நகரில் ஹிஜாப் அணியும் அவர்களது அனுபவம் என்னுடையதைப் போன்றதாகத்தான் அமைந்திருந்ததா? அல்லது நான் மிதமிஞ்சிய வகையில், சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் உணர்ச்சிவயப் படுகிறேனா? எனது அன்றாட பயணங்களின்போது ஏனையோர் வேறு எதனையும் பார்க்கின்றார்களா, அல்லது என்னைத்தான் கூர்ந்து கவனிக்கின்றார்களா? ஏன் என்னை அவர்கள் அனுதாபக் கண்கொண்டு அல்லது விரோத மனப்பாங்கோடு பார்க்கிறார்கள்? ஐயங்களும் விடை தெரியா வினாக்களுமே என்னைச் சூழ்ந்து கொண்டிருந்தன.

இக்கட்டான இந்த சூழ்நிலையில்தான் எனது கலாநிதிப் பட்டப் படிப்புக்கான ஓர் ஆய்வுத் தலைப்பைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். சிறிது காலத்துக்கு அதனை ஒத்தி வைக்கும் எண்ணமும் எழுந்தது. என்றாலும், ஹிஜாபுக்கான எதிர்வினை களே ஆய்வுக்கான நல்லதொரு பொருளாக அமையலாம் எனவும் தோற்றியது.

ஹிஜாப் மேற்கத்திய உலகில் ஏன் அடக்குமுறையின் ஓர் அடையாளமாகத் தோற்றுகின்றது? விடுதலையும், சுதந்திரமும் அளிப்பதாக நானும் எனது தோழியரும் கருதும் ஓர் அம்சம், ஏன் எம்மைச் சூழவுள்ள முஸ்லிமல்லா சமூகத்துடன் இத்துணை முரண்பாடுகளை ஏற்படுத்தி வைத்துள்ளது? இஸ்லாம், ஹிஜாப் என்பன குறித்து நாம் கொண்டுள்ள கருத்துக்களை ஏன் மக்கள் விளங்கிக்கொள்ளாதிருக்கின்றார்கள்?

இத்தகு வினாக்களுக்கான விடைகளைத் தேடும் ஒரு பயணத் தின் விளைவே இந்த நூல். Rethinking Muslim Women and the Veil என்ற இந்த நூலின் மிக முக்கியமான நோக்கம் 'ஹிஜாப் ஓர் அடக்குமுறை' என்ற மேற்கத்திய வாதத்திற்குச் சவாலாக அமை வதாகும். ஹிஜாப் முஸ்லிம் பெண்களின் அடக்குமுறையின் சின்னம் எனும் பிரபலமான மேற்கத்திய கருத்து, உருவாக்கப்பட்ட ஒரு பொய்ம்மையே தவிர, அதை அணிபவர்களது அனுபவங் களைப் பிரதிபலிப்பது அல்ல என்பதே எனது பிரதான வாத மாகும். இந்தப் பொய்ம்மை, எப்போதும் மேற்கத்திய உலகின் அரசியல் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டில் தொடர்வதும் இதே கதை தான்.

மேலும், 'சமத்துவம்', 'சுதந்திரம்' என்பன குறித்த தாராண் மைப் போக்கிலான கருத்தோட்டமே ஹிஜாப் அடக்குமுறை யானது எனக் காட்டுகின்றது. 'சமத்துவம்', 'சுதந்திரம்' என்பன குறித்து மாற்றுச் சிந்தனைகளும் காணப்படவே செய்கின்றன. அவையோ, ஹிஜாப் அணிதல் பற்றிச் சாதகமான பல கருத்துக் களைக் கொண்டனவாயுள்ளன.

## *அத்தியாயம் 1*

*ஹிஜாப் மேற்குலகில் அடக்குமுறையின் ஓர் அடையாளமாகக் கொள்ளப்பட்டது எப்போது? என என்னால் துல்லியமாகக் குறிப் பிட்டுக் கூற இயலவில்லை. எவ்வாறாயினும் பதினெட்டாம் நூற்றாண்டுக் காலத்திலேயே ஹிஜாப் முஸ்லிம்களின் மத்தி யிலான ஓர் அடக்குமுறை வழக்கம் என்ற என்ற கருத்து நன்கு வேரூன்றியிருந்தது.* Mary Wortley Montagu *எனும் பிரித்தானியப் பெண்மணி. 1717-18 ஆண்டுக் கால கட்டத்தில் தனது கணவரான மாண்புமிகு* Edward Wortley Montagu *அவர்களுடன் துருக்கிக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். துருக்கியில் தான் தங்கி யிருந்த வேளை ஹிஜாப் அணிதலைப் பரீட்சித்துப் பார்த்தார் அவர். அது பெண்களுக்குச் சுதந்திரத்தை வழங்குவதாகவும், இன்னாரென்று அறியப்படாமல் பெண்கள் வெளியே செல்ல அது துணையாகிறது என்றும் அனுபவபூர்வமாகக் கண்டு கொண்ட அவர், ஹிஜாப் அடக்குமுறையின் சின்னம் என்ற கருத்தை மறுத்துரைக்கலானார்.[1] என்றாலும்கூட, பத்தொன் பதாம் நூற்றாண்டில் ஹிஜாப் அடக்குமுறையின் சின்னம் எனும் கருத்து பிரபல்யப்படுத்தப்பட்டு வந்தது. மத்திய கிழக்கு, ஐரோப்பிய காலனித்துவத்துக்கு உட்பட்டுவந்த ஒரு காலகட்டம் அது. பெண்களின் அந்தஸ்து பற்றிய மேற்குலகக் கருத்தாடல் மத்திய கிழக்கு மீதான ஆக்கிரமிப்பையும் காலனித்துவத்தையும் நியாயப்படுத்துவதற்கான ஒரு சாதனமாகப் பிரயோகிக்கப் பட்டமையை லைலா அஹமத் நன்கு தெளிவு படுத்துகின்றார்.*

*காலனித்துவ யுகத்தின் போது, ஐரோப்பிய ஆண்களும் பெண் களும் -அவர்கள் காலனித்துவ வாதிகளோ. பிரயாணிகளோ, கலைஞர்களோ, மதபோதகர்களோ, அறிஞர்களோ, அரசியல் வாதிகளோ, பெண்ணிய வாதிகளோ யாராயிருந்தாலும் - முஸ் லிம் பெண்கள் தமது கலாசாரத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றார்கள் என்றே கருதி வந்தார்கள். பலதார மணம், ஒதுக் கப்பாடு, ஆண்களின் இலகுவான விவாக ரத்து என்பவற்றோடு ஹிஜாபும் முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் அடக்குமுறைகளின் பட்டியலில் அடங்கியிருந்தது.*

*மத்திய கிழக்கு முழுவதும் சீர்கெட்டுக் காணப்படுவதாகவே மேற்குலகத்தார் கருதி வந்தனர். அந்த சீர்கேட்டின் முக்கியமான*

தோர் அங்கமே பெண்கள் அனைவரினதும் தாழ்த்தப்பட்ட நிலை மை. அந்நிலைமையின் ஓர் அடையாளச் சின்னமே ஹிஜாப். [2]

ஹிஜாப் அடக்கியாள்வது என்ற கருத்து வெறுமனே மேற்குலகில் மாத்திரம் இருந்ததொன்றல்ல. சுதேசி சமூகத்தின் மேல்வகுப்பார் மட்டத்திலும் இதே கருத்து நிலவி வந்தது: நாங்கள் பிற்பட்டோர்; எமது பெண்கள் தாழ்த்தப்பட்டவர்கள்; நாம் முன்னேற வேண்டும் என்றால் மேற்குலகின் நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம். மேற்குலகத்தாருடன் ஒட்டி வாழ வேண்டுமாயின் ஹிஜாபை அகற்றிக் கொள்வது, சுதேசி மேல் வகுப்பினரைப் பொறுத்த வரை முக்கியமான, உடனடியான ஒரு தேவையாக அமைந்தது. இவ்வாறே ஹிஜாப் ஆனது ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் முன்னேற்றத்தை அல்லது பின்னடைவை மதிப்பிடும் ஓர் அளவுகோலாகக் கொள்ளப்பட்டது. [3]

ஆள்வாரை அண்மியிருக்கும் ஆதங்கம் கொண்டிருந்த சுதேசி மேல் வகுப்பாரே நவீனமயமாக்கல் முனைவுகளில் தீவிர ஈடுபாடு காட்டி வந்தனர். ஹிஜாப் எதிர்ப்புப் பிரசாரங்களில் முன்னிலை வகித்தவர்களும் அவர்களே. ஹிஜாபை ஆதரித்தோர் மீதான தாக்குதல்கள் பெருகின. இறையச்சம், செல்வம், சமூக அந்தஸ்து முதலாய பெறுமானங்களைச் சித்தரித்துக் காட்டுவதாக அமைந்தது ஹிஜாப். விளைவாக, அப்பெறுமானங்களும் தாக்கு தலுக்குள்ளாயின.[4]

ஹிஜாப் எதிர்ப்பு முனைவுகள் நாட்டு மக்களிடையே பெரிய தொரு பிளவை ஏற்படுத்தி வைத்தன. ஒரு புறத்திருந்தோர், மேற் குலகக் கருத்துக்களினால் கவரப்பட்டவர்கள்; காலனித்துவ வாதிகளின் கலாச்சார அம்சங்களைப் பின்பற்றியவர்கள்; காலனித் துவம் காரணமாக பொருளாதார, சமூக ரீதியாகப் பயன்கள் ஈட்டிக்கொண்டோர். மறுபுறுத்திலிருந்தோர், தாழ் குடியினர்; பாரம்பர்ய முஸ்லிம் போதகர்கள்; காலனித்துவத்தின் விளை வாகச் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளானோர்; மேற்குலகப் போக்குகளோடு .இணைந்து செல்லாதவர்கள். [5]

ஆக, 'ஹிஜாப் அடக்கியாள்வது' என்ற எண்ணம் கருக் கொண்டது, அதிகார பிரயோகத்தின் காரணமாக. குறைந்தது, அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற குறிக்கோளின் காரணமாக. ஹிஜாப் அடக்கியாள்வது என்பது குறித்த எந்தவொரு வாதப் பிரதிவாதமும் அறிந்தோ, அறியாமலோ, காலனித்துவவாதி

களதும், கீழைத்தேயவியலாளர்களதும் கருத்துக்களின் அடிப் படையிலேயே எழுப்பப்படுகின்றன. எனவேதான் ஹிஜாப் பற்றிய வாதாட்டங்கள் மிக்க தீவிரத் தன்மை வாய்ந்தனவாக அமைந்து விடுகின்றன. லைலா அஹமத் கூறுவது போல, ஹிஜாப் வாதாட் டங்கள் காலனித்துவ காலம் முதற்கொண்டு கீழைத்தேயவிய லாளர்களின் சரக்குகளைத்தான் சுமந்து செல்கின்றன.[6] இன்றைய முஸ்லிம் உலகிலும் ஹிஜாப் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் இத்தகு நிலைமையையே பிரதிபலிக்கின்றன.

### நவீனத்துவத்தின் மெய்ப்பொருள் கோட்பாடு

1700களிலேயே ஹிஜாப் அடக்கியாள்வது என்று கருதப்பட்டு வந்திருந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் காலனித்துவ யுகம் ஹிஜாப் குறித்துக் கொண்டிருந்த ஆதங்கம் தான் என்ன? காண்பதைத் தடுக்கின்ற ஹிஜாபின் தன்மைதான் அது தாக்கப் படுவதற்கான காரணியாகவும் அமைகின்றது. நவீன காலனித்துவ காலத்தில்தான் இத்தகு செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட் டன என்றாலும், இன்றைய நாள் வரை அது தொடர்ந்தே வருகின்றது. ஹிஜாப் மீதான சமகாலத் தாக்குதல்களும் இதனடி யாக எழுவனவே.

Colonising Egypt எனும் தனது நூலில் நவீன மெய்ப்பொருள் வாதம் குறித்து Timothy Mitchell முன்வைக்கும் வாதம் இங்கு கவனத்தில் கொள்ளத் தக்கது. தனி மனிதர்கள், தாம் உலகின் அப்பாலிருந்து இந்த லௌகிக உலகைக் காண்கிறார்கள். முழு உலகமும் அவர்களுக்கு ஒரு காட்சிப் பண்டமாகவே தோற்று கின்றது. ஐரோப்பியம் அல்லாத மெய்ப் பொருள் வாதத்திலோ இந்த லௌகிக உலகை ஒரு காட்சிப் பண்டமாகக் கொள்ள இடம் கிட்டுவதில்லை.[7]

### காணலும் ஹிஜாபும்

உலகை ஒரு காட்சிப் பண்டமாகக் கொள்வதில் நான் குறிப்பிட்டுக் காட்ட விளைவது காண்பதற்குக் கொடுக்கப்பட் டுள்ள முக்கியத்துவமாகும். The Times பத்திரிகை, மாபெரும் கண்காட்சி குறித்து தனது 1851-ம் ஆண்டு கோடைக் காலப் பதிப்பில் கூறியது: "இப்போதுதான் நாம் புறப்புலன் கொண்டு காண்போராக இருக்கின்றோம்.; எமது கரங்களுக்கு எட்டக்கூடிய அனைத்தையும் ஒரு கண்ணாடிப் பேழையின் கீழ் வைத்து எமக்குப்

போதும் ஆகுமளவு கண்டு களிக்கப் போகிறோம். [8]

இதுவே நவீன புறப்புலன் கொண்டு காணுதல் என்பார் Mitchell. அதாவது உலகை, நடுநிலையான ஒரு புற நோக்கிலிருந்து அவதானிக்கக் கூடுமாயிருப்பது. இவ்வாறான ஒரு நிலையில் காண்பதைத் தடுக்கும் ஓர் உலகை எதிர்கொள்பவர் என்ன செய்யக்கூடும்? காணக்கூடிய ஒன்று இருந்தால் தான் காணலாம். தான் காணப்படாமல், தான் காண விரும்பும் பொருள் காணப்பட வேண்டும். இவ்வகையில் பூர்வீகக் குடிகள் நல்லதொரு காட்சிப் பொருளாகவே தோற்றுகின்றனர்.

காலனித்துவ யுகத்தில் மத்திய கிழக்கில் வந்து இறங்கும் ஐரோப்பிய பயணி ஒருவர், பெண்கள் ஹிஜாப் அணிந்தவர் களாகத் தம்மை மறைத்துக் கொண்டிருப்பதைக் காணும் போது எந்தளவு விரக்திக்குள்ளாவார் என்பதை ஊகித்துக் காண்பது கடினமான ஒரு விஷயமல்ல. அங்கு பெண்கள் ஒரு காட்சிப் பொருளாகத் தம்மைக் காட்டிக் கொள்வதில்லை. அவர்களது வீடுகளின் ஜன்னல்கள்கூட தட்டிகளால் மறைக்கப்பட்டிருந்தன. ஆண்-பெண் தனித்தனிப் பிரிபாடுகள் ‘காண்’பதனை அனுமதிப் பதாகவும் இல்லை. உலகம் ஒரு காட்சிப் பொருள் என்ற வரையறை கள் அனைத்தையும் அவர்கள் மீறிச் செல்கின்றார்கள். அவர் களைக் காண முடியவில்லை.

ஆம்! அவர்களைக் காண முடியவில்லை; ஆனால், அவர்கள் காண்கின்றார்கள். காட்சிப் பொருள் ஒன்றாக அவர்களைச் சித்த ரிக்கவும் இயலவில்லை. விருந்தினருக்குத் தம்மைக் காட்சிப் படுத்தலை மறுத்து நிற்கும் அபூர்வப் பிரகிருதிகள் அவர்கள்.

இதுவே ஹிஜாபுக்கு எதிரான ஐரோப்பிய பிரச்சாரத்திற்கான அத்திவாரம்.

நாகரிகத்தின் உச்சத்தை எட்டிவிட்ட இறுமாப்புடன் மத்திய கிழக்கில் வந்து இறங்கினர் ஐரோப்பியர். மத்திய கிழக்கை வந்து சேர்ந்ததும் அந்த எண்ணங்கள் தகர்ந்து போயின. தாம் அறிந்து கொள்ள முடியாதுள்ள சிருஷ்டிகள் மீது ஒருவர் எவ்வாறு ஆதிக்கம் செலுத்தலாம்? அவற்றைக் காணவும் இயலவில்லை; சித்தரிக்கவும் முடியவில்லை. காண இயலாத ஒன்றை, காட்சிப் பொருளாக அமையாத ஒன்றை எவ்வாறுதான் கட்டுப்படுத் தலாம்? தம்மை மறைத்துக் கொண்டுள்ள பெண்களைக் காண்பது

ஐரோப்பியருக்குச் சங்கடங்களை விளைத்தது. தம்மால் காண இயலாத பெண்களால் தாங்கள் காணப்படுகின்றோம். இது ஒரு வகையில் மத்திய கிழக்கின் பெண்களுக்கு ஐரோப்பியர் மீதான ஒரு மேலாண்மையை அளித்தது. மேலோர் - கீழோர் இடையில் எதிர் கொள்ளும் சாதாரண உறவுகளில் இது - காணப்படாமல் காண்பது - தலை கீழானதொரு நிலையைத் தோற்றுவித்தது.

எனவே தான் ஐரோப்பியர்கள் பழிவாங்கத் தொடங்கினார்கள். அவர்கள் ஹிஜாபைத் தாக்கினார்கள். அதனைக் கிழித்தெறிய முனைப்புடன் செயலாற்றினார்கள். பெண்களைக் கண்டு கொள்வதற்கான அனைத்துக் கருமங்களையும் ஆற்றினார்கள். சித்திரங்களிலும், புகைப்படங்களிலும் அவர்கள் பெண்களை நிர்வாண கோலத்தினராக, ஆடைகள் களைந்தவர்களாகக் காட்டலானார்கள். இவ்வாறு தான் முஸ்லிம் பெண்களின் மறைப்பை அகற்றும் கைங்கர்யங்கள் ஆரம்பமாயின.

அஹ்மத் வாதிடுவது போல ஹிஜாப் பற்றிய உரையாடல்கள், காலனித்துவ மேலாதிக்கம், அதற்கெதிரான முனைவுகள், போராட்டங்கள் பற்றிய வரலாற்றில் தோய்ந்தனவாகவே உள்ளன.[9] சமகால முஸ்லிம் உலகின் போராட்டங்களிலும் கூட இதன் செல்வாக்குப் பதிந்துள்ளது.

## அத்தியாயம் 2

## டொரண்டோ நகரில் ஹிஜாப் அணிதல் உணர்வுகளும் அனுபவங்களும்

*நான் ஹிஜாப் அணிய ஆரம்பித்த வேளை, கனடாவின் மொன்ட்ரியல் நகரில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்கு முஸ்லிம் பாடசாலை மாணவியர் இருவர் தமது தலை முக்காட்டை அகற்ற மறுத்தமைக்காக வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.[10] இதனைத் தொடர்ந்து கனடாவெங்கும், ஹிஜாபின் கருத்து, கனடிய சமூகத்தில் அதன் இடம் என்பன குறித்துப் பெரும் விவாதங்கள் எழலாயின. தலை முக்காடு என்பது அந்நியமான தொரு வழக்கம்; அதனை ஏற்புடைத்ததான ஒன்றாக ஏற்றுக் கொள்வதா? இல்லையா? எனக் கனடியர்கள் தீர்மானிக்க வேண்டும் என்ற வகையிலேயே தலை முக்காடு பற்றிய சர்ச்சை அமைந்திருந்தது. கனடிய ஒலிபரப்பு ஆணையம் ஒரு வினாவை எழுப்பியது: 'கனேடிய குணாம்சம் பற்றிய பரீட்சையில் ஹிஜாப் சித்தியடையக் கூடுமா?'[11]*

*பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவியர் இருவரும் கனடாவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் என்பது பொருட்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.* Globe and Mail-*இல் முஸ்லிம் பெண்கள் தாம் விரும்பக் கூடுமாயின் ஹிஜாப் அணியும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார்* Jeffrey Simpson.[12] *இதற்கான, மிகக் கடூரமான மறுப்புரை இரு பெண்களிடமிருந்து வந்தது. முஸ்லிம் பெண்களது அடக்குமுறையின் மிகத் தெளிவானதொரு சின்னமே ஹிஜாப் என அவ்விருவரும் வாதாடினர்.* [13]

*பகிரங்கமாக நடந்த இவ்விவாதங்களில், ஹிஜாப் அணிந்தவர்களாக இருந்த பெண்களின் குரல்களைக் கேட்க முடியவில்லை. எனவே ஹிஜாப் அணிபவர்களான பெண்களின் கருத்துக்களுக்கும் நாம் செவி மடுக்க வேண்டியது அவசியம். அவர்களது கருத்துக்கள் அனைத்து முஸ்லிம்களதும் ஆனதென நான் பொதுமைப் படுத்திக் கூற விரும்பவில்லை. எனது நோக்கமாயிருந்தது, சில முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் குறித்து எவ்வகையான கருத்துகள் கொண்டிருக்கிறார்கள் எனக் கண்டு கொள்வதாகும்.*

*1996, மே-ஜூலை கால இடைவெளியில் கனடாவின் டொரண்டோ நகரப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த பதினைந்து ஸுன்னி பெண்களையும், ஒரு இஸ்மாயிலி பெண்ணையும் நான் பேட்டி கண்டேன். இந்தப் பதினாறு பேருள்ளும் ஆறு பேர் இஸ்லாத்தைப் புதிதாகத் தழுவிக் கொண்டவர்கள். பத்துப் பேர் முழு நேர ஹிஜாபிகளாக இருந்தார்கள். அவர்களுள் ஐவர் புதி தாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள். ஏனைய ஐவரும் சிற்சில சந்தர்ப்பங்களில் ஹிஜாப் அணிந்தார்கள் இருவர் மட்டும் எதிர் காலத்தில் முழுநேரம் ஹிஜாப் அணியும் எண்ணம் இல்லாத வர்களாக இருந்தார்கள்.*

*பதினைந்து ஸுன்னி முஸ்லிம்களுள் ஒருவர் மட்டும் ஐவேளைத் தொழுகையைக் கடைப்பிடிக்காதவராக இருந்தார். ஆக, ஏனைய அனைவரும் மார்க்கப் பற்றுடையோராக ஏனை யோரால் கருதப்பட்டார்கள்.[14] வட அமெரிக்க இஸ்லாமிய அறிஞர்களது கருத்துப்படி வட அமெரிக்காவில் குறைந்த ஒரு தொகையினரே (1 முதல் 5 விழுக்காடு) பள்ளிவாசலோடு நெருக் கமானவர்களாக இருக்கின்றார்கள்.[15] அவர்களுள்ளும் மிகச் சிறிய தொகையினரே என்னால் பேட்டி காணப்பட்டவர்கள். எனது பேட்டியாளர்களின் அந்தரங்கங்களைப் பேணுவதற்காக நான் அவர்களுக்குப் புனைப் பெயர்கள் சூட்டியுள்ளேன்.*

## ஹிஜாப் பற்றிய புரிதல்கள்

### 1. ஹிஜாப் ஏன்?

*“இது கனடா. இங்கே உங்களுக்கு எல்லாச் சுதந்திரமும் உண்டு. உங்கள் தலையில் அணிந்திருப்பதை நீங்கள் இங்கே அணியத் தேவையில்லை” - ஹிஜாப் அணியும் பெண்களைப் பார்த்து சில கனேடிய மக்கள் சொல்வது இது. இத்தகைய விமர்சனங்கள் வேடிக்கையானவையா? தடுமாற்றத்தை ஏற்படுத்துவனவா? என் பது இந்தக் கருத்துரைப்பு வெளிப்படுத்தப்படும் விதத்திலேயே தங்கியுள்ளது.*

*தெற்காசியாவைச் சேர்ந்தவள் நூர். நூலகத்து சிற்றுண்டிச் சாலையில் அதிர்ச்சியூட்டும் ஓர் அனுபவத்துக்கு ஆளானாள் அவள். அவளை அணுகிய ஒரு மூத்த பெண்மணி, நூர் ஏன் பிற் போக்கான வழக்கங்களைக் கனடாவுக்குள் கொண்டு வருகின் றாள் என ஆத்திரத்துடன் கேட்டாள். ‘கனடாவில் பெண்களுக்*

கான உரிமைகளை நிலை நாட்டுவதற்காக நாம் மிகக் கடுமையாக உழைத்திருக்கின்றோம்; ஹிஜாப் அணிவது எமது உழைப்பை யெல்லாம் ஒரேயடியாக அழித்துவிடும்' என அம்மாது வலியுறுத்திக் கூறினாள். பிறரது கவனத்தை ஈர்க்கும் வகையில் தான் பிரகடனங்கள் ஏதும் செய்யும் முகமாகவோ அல்லது, இலகுவாகப் பிறரது வெறுப்பை ஈட்டிக் கொள்வதற்காகவோ ஹிஜாப் அணிய வில்லை என்றும், இது தனது மார்க்கம் சம்பந்தப்பட்ட ஒரு விடயமே என்றும் நூர் தெரிவித்த போது, அந்தப் பெண் இன்னமும் திருப்தியடையாவிட்டாலும், சற்றே அமைதியடைந்தது போல் தோற்றியது. எவ்வாறாயினும் நூர் ஹிஜாப் அணிவது கூடாது என்றே அவள் கருதினாள். கனடாவில் தான் ஹிஜாப் அணிவதற்கு, மத ரீதியான காரணங்களையே நூர் இந்த முஸ்லிம் அல்லாத கனேடிய பெண்ணுக்குக் கூறி வைத்தாள்.

எனது பேட்டியாளர்கள் அனைவரும், அரிதாகவே ஹிஜாப் அணியும் பாதிமா, ஏனையோரைப் போல் முழு நேர ஹிஜாபிகளாக அமையாதோர் கூட, ஒரு நாள் ஹிஜாப் அணிவது மத ரீதியான ஒரு செயல் என்றே கொண்டனர். ஏன் அவர்கள் இதனை மத ரீதியானதாகக் கொள்கின்றார்கள் என வினவிய வேளை 'குர்ஆனில் உள்ளது அது', 'அல்லாஹ் குர்ஆனில் அவ்வாறு தான் கூறுகின்றான்' என்ற ரீதியிலேயே பதிலளித்தனர். இஸ்லாத்தைத் தழுவிய ஆங்கிலப் பெண் பாஸ்ஸிமா (Bassima) 'பெண்கள் பருவமடைந்துவிட்டால் முகத்தையும் கைகளையும் தவிர, உடலின் மற்றெல்லாப் பாகங்களையும் மறைக்க வேண்டும்' என ஹதீஸ் கூறுகின்றது எனப் பிரஸ்தாபித்தார்.

### *2. பாரம்பர்ய விளக்கம்*

மீள் திரையிடல் பற்றிய ஆக்கங்களுள் பெரும்பாலானவை ஹிஜாப் அணியாத பெண் அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தம்மால் பேட்டி காணப்பட்டவர்கள், 'குர்ஆன் மறைத்தலை ஆணையிடுகின்றது' எனக் கூறுவதனை தூற்றுதலாகவே அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அத்தகு அறிஞர்களின் நோக்கில் குர்ஆன் கண்ணியமான முறையில் ஆடை அணிவதனைக் குறிப்பிடுகின்றதே ஒழிய, இஸ்லாமிய வாதிகள் கூறுவது போன்ற மறைத்தலை அல்ல.

தமது ஆய்வுகளை இவ்வாறாக நடாத்துபவர்கள், தமது ஆய்வுக் கட்டுரைகளுக்காகப் பேட்டி காணப்பட்டவர்களுக்குச்

செய்யும் பெரும் அகௌரவமே இது. தமது பேட்டியாளர்களை விடத் தாமே குர்ஆனீய விளக்கம் அளிக்கத் தகுதி பெற்றவர்கள் என இவர்கள் கருதுவதாக இது அமைகின்றது.

எகிப்திய பெண்ணியம் பற்றி அஸ்ஸா கராம் மேற்கொள்ளும் அணுகு முறை வரவேற்கத் தக்கதாயுள்ளது. இஸ்லாமிய வாதிகள் கூறுவது போல மறைத்தலைக் குர்ஆன் ஆணையிடுகின்றது என்பதை அவர் ஏற்கவில்லை. என்றாலும் அவர்களது அணுகு முறையை அவர் விதந்து பேசுகின்றார்: "இஸ்லாமிய பாரம்பர் யங்களோடு வளர்ந்த ஒரு பெண் என்ற வகையில் அவர்களது இஸ்லாமிய - குர்ஆனிய - அடிப்படையின் ஏற்புடைமையை என்னால் மறுக்க இயலவில்லை; என்றாலும் அவர்கள் கற்பித்த விளக்கங்கள் ஏற்படுத்தக்கூடிய சமூக விளைவுகளின் காரணமாக அவற்றை என்னால் ஏற்கவும் இயலவில்லை."[16] மறைப்போரும் மறைக்காதோரும் தவறான புரிதல்களின் காரணமாக ஒவ்வொரு வரும் தாம்தாம் சரியென்றும், மற்றவர் ஏமாற்றுதலுக்கு ஆளாயுள் ளார் என்றும் நம்புகின்றனர் என்றே கராம் கருதுகின்றார்.[17]

தவறான புரிதல்களின் காரணமாகவே பெண்கள் ஹிஜாபைத் தேர்ந்து கொள்கின்றார்கள் என்ற கருத்தே மேற்குலகில் பலம் வாய்ந்ததாக உள்ளது. பல்கலைக் கழகத்தில் நான் ஹிஜாப் அணியத் தொடங்கிய வேளை, எனது சக மாணவி ஒருத்தி, எனது ஒரு நண்பியிடம் 'அவள் அடக்குமுறைக்கு ஆளாகியுள்ளாள் என்பது அவளுக்குத் தெரியவில்லையா?' என்றாள். எவ்வாறா யினும் எந்த ஒரு பெண்ணும், குறிப்பாக மேற்குலகில் வளர்ந்த ஒருத்தி, ஹிஜாபைத் தேர்ந்து கொள்ளும் போது, முஸ்லிம் சமூகத் தின் உள்ளும் புறமும் குறித்து நிலவி வரும் வாதப் பிரதிவாதங்கள் அனைத்தையும் அறிந்தவளாகவே உள்ளாள்.

முஸ்லிம் உலகில் ஹிஜாப் நீண்டதொரு பாரம்பர்யத்தைக் கொண்டுள்ளது. தற்போதைய வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் அண்மைக் காலத்தில் எழுந்தனவே. மேற்குலகுடனான காலனித் துவ மோதல்களுடன் இணைந்தவை அவை. கனடாவில் வாழ்ந்து கொண்டு ஹிஜாபைத் தேர்ந்து கொள்வது இலகுவான ஒரு கரும மல்ல. கனடாவின் பரந்த சமூகம் ஹிஜாப் குறித்து சாதகமான கருத்துக்கள் கொண்டதொன்றல்ல. அதன் மூலம் விளைவது தொல்லைகளும் காழ்ப்புணர்வுகளுமே.

என்னால் பேட்டி காணப்பட்ட பெண்டிர், 'நான் ஏன் இதனை அணிய வேண்டும்?' என்பது குறித்து தீவிரமாக ஆலோசித்ததன் பின்னரே ஹிஜாபைத் தேர்ந்து கொள்ளவும், தினமும் அதனை அணியவும் தீர்மானித்துள்ளனர்.

மீள் திரையிடல் பற்றிய ஆய்வாளர்கள், ஹிஜாப் அணிந்து கொள்ள பல்வேறுபட்ட நோக்கங்கள் காரணமாக அமைந்துள் ளன என்பர். அரசியல் எதிர்ப்பு, பொருளாதாரக் காரணிகள், இறையச்சம் எனப் பல.

என்னால் பேட்டி காணப்பட்டவர்கள், குர்ஆன் வாசகங்களுக் கான பல்வேறு வியாக்கியானங்களையும் கருத்தில் கொண்டவர் களாய், தமது சிந்தைக்குப் பொருத்தமானதெனக் கொண்டதைத் தேர்ந்து கொண்டனர். பெண்கள் தமது தலைகளை மறைத் துக்கொள்ள வேண்டும் என்ற குர்ஆனீய வாசகம் மிவும் தெளி வானது என்று அவர்கள் உறுதியாகவே நம்பினர்.

இஸ்லாம் பற்றிப் பொதுவாக நிலவி வந்த கருத்துகள் தான் என்ன? மோசமானதொரு மார்க்கம் இஸ்லாம்; வன்முறையைத் தூண்டுவது அது; பெண்களைக் கொடுமைப் படுத்துவது. எவ்வாறாயினும் நான் கண்ட பெண்களைப் பொறுத்த வரை, ஹிஜாப் என்பது அடக்கு முறையின் சின்னமாகவோ, வன்முறை யைத் தூண்டுவதாகவோ தோற்றவில்லை. தூய்மையை, கண்ணியத் தை, ஒரு பெண்ணின் இஸ்லாமிய அடையாளத்தை, இறைவனுக் கான கீழ்படிதலை, தான் ஒரு முஸ்லிம் என்பதன் சான்றினைக் காட்டுவதாகவே ஹிஜாப் அமைந்துள்ளது. ஹிஜாபில் சாந்தியைக் கண்ட அவர்கள், அதனை அணிவதில் மகிழ்ச்சி கொண்டார்கள்.

இவர்களைப் பொறுத்த மட்டில் ஹிஜாப் சமூகத்துக்கு மிகவும் பிரயோசனமானது; ஆண்-பெண் தொடர்புகளை அது தூய்மைப் படுத்துகின்றது; போகப் பொருளாக அல்லாது மானிடர்களாக அவர்களை மதிக்க வைக்கின்றது. ஹிஜாபின் காரணமாக சமூகத் தில் பொறாமை, பகைமை, முதலாய பாதக உணர்வுகள் குன்றிச் செல்வதனை அவர்கள் கண்டார்கள். பெண்ணிய முறைமைகளும், அனுபவங்களின் திரட்சியும் அறிவுக்கான அத்திவாரத்தை அளிப் பன என்பதில் ஏதும் அர்த்தம் இருக்கக்கூடுமாயின், ஹிஜாப் பற்றிய எண்ணங்கள் ஆழமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பெண்கள் தவறான புரிதல்கள் கொண்டுள்ளார்கள் எனத் தூஷணையான கண்கொண்டு காணுதல் கூடாது.

## *அத்தியாயம் 3*

### *ஹிஜாபின் அர்த்தங்கள் பல*

*மேற்குலகத்தின் சம்பிரதாய ஞானம், ஹிஜாபின் சமூகவியல் ரீதியான மனோபாவத்தை சரிவரக் கிரகித்துக் கொள்ளவில்லை. மேற்கு எப்போதுமே பெண்களை அடக்கு முறைக்காளாக்கும் சாதனமே (இது ஒன்றுதான் பெண்களை அடக்கு முறைக்கு ஆளாக்கியுள்ளது போல) ஹிஜாப் என வலியுறுத்தி வந்துள்ளது.*

*ஹிஜாப் அணியும் பெண்கள் நிர்ப்பந்தத்தினாலும், வற்புறுத் தலினாலும் தான் அணிகின்றார்கள்; இஸ்லாத்தல் அடக்கு முறை யைச் சித்தரிப்பதாகவே அது உளது என்கின்ற மேற்குலக வாதம் தவறானது. ஆகவேதான் ஹிஜாப் கொண்டிருக்கும் பல்வேறு அர்த்தங்கள் எமது கவனத்தை ஈர்த்து நிற்கின்றன. ஹிஜாப் என்பது தனியொரு கருத்தை மாத்திரம் கொண்டதல்ல; 'ஹிஜாப் அடக்கியாள்வது' என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள், உண்மை யில் பெண்களுக்கு அநீதியே இழைக்கின்றார்கள். பிரான்சிலும், கனடாவிலும் மாணவியர் பாடசாலைகளிலிருந்து வெளியேற்றப் பட்டதும், முஸ்லிம் பெண்கள் தொழில் வாய்ப்புகளை இழப் பதும், தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுவதும் அவ்வாறான அர்த்தங்கள் கொண்டிருப்பதனாலாகும்.*

*ஏனைய நாடுகளின் முஸ்லிம் பெண்கள் குறித்துப் பகுப்பாய் வுகள் செய்து காணில், தத்தமது சூழல்களுக்கு அமையவும், தனி நபர்கள் மத்தியிலான வேறுபாடுகளுக்கு அமையவும், ஹிஜாப் பல்வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டமைவதை நாம் கண்டு கொள்ளலாம்.*

*பெண்கள் தம்மை மறைத்துக் கொள்வதற்கான பல்வேறு நோக்கங்கள் பற்றிய எனது ஆய்வுகளில் ஏழு வகையான அர்த்தங்களை நான் கண்டுகொள்ள முடிந்தது. புரட்சிகர எதிர்ப்பு, அரசியல் எதிர்ப்பு, மதரீதியிலான எதிர்ப்பு, பொது வாழ்வின் பயன்களை அடையும் வாய்ப்பு, தனது சொந்த அடையாளத்தை நிறுவுதல், பாரம்பர்ய வாழ்வமைப்பு, அரச நியமங்கள் ஆகியன அவை. இவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகள் ஒரு பெண் ணின் ஹிஜாப் அணியும் நோக்குடன் இணைந்து செல்லலாம்.*

ஆக, ஹிஜாப் அணிவதன் பல்வேறுபட்ட அர்த்தங்களை நாம் காண்போம். பின்னர் சமகால மேற்குலக செய்தி ஊடகங்கள் ஹிஜாப் குறித்து மக்கள் மனதுள் திணிக்கும் கருத்துக்களை மதிப்பீடு செய்வோம். உண்மையில் ஹிஜாப் அணியும் பெண்களது நோக்கங்களுக்கு முரண்பட்டனவாகவே மேற்குலக ஊடகங்கள் காட்டித் தரும் அர்த்தங்கள் அமைந்துள்ளன என்பது தெளிவாகும்.

**மறைத்தலுக்கான காரணங்கள்**

### 1. புரட்சிகர எதிர்ப்பு

1950-களில் அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்தின் போதும், 1970-களில் ஈரானிய புரட்சியின் போதும் முன்னர் ஹிஜாப் அணிந்திராத பெண்கள்கூட, ஹிஜாப் அணிந்தவர்களாக, தம்மை அடக்கியாண்ட அரசுகளைத் தூக்கியெறியத் துணை புரிந்தனர்.[18] காலனித்துவத்துக்கும், அதன் அடிவருடிகளான சுதேச உயர் குடியினருக்கும், இவர்களுக்கு வக்காலத்து வாங்கும் அத்தனை சக்திகளுக்கும் தாம் எதிரானோர் என்பதை, தலையை மறைத்திருந்த தாவணி எடுத்துக் காட்டியது.

### 2. அரசியல் எதிர்ப்பு

சுதேச உயர் குடியினர் மூலம் அறிமுகமாகி வந்த மேற்கத்திய மயமாக்கல் முனைவுகள், மேற்கத்திய நல ஏகாதிபத்திய வாதம் முதலானவற்றை அங்கீகரிக்க மறுக்கும் தமது நிலைப்பாட்டை வெளிக்காட்டும் ஒரு முனைவாகப் பெண்கள் ஹிஜாப் அணியலாயினர். சமகால அரசியல் கொள்கைகளுடன் தாம் உடன்பாடு காணவில்லை என்பதையும், வர்த்தக, தொழில்நுட்ப, அரசியல், சமூகத் துறைகளுள் மேற்குலகம் செய்து வரும் ஆக்கிரமிப்புகள் தமக்கு உடன்பாடற்றவை என்பதையும் பெண்கள் அணியத் தொடங்கிய ஹிஜாப் உணர்த்துவதாய் அமைந்தது. [19]

### 3. மதரீதியான எதிர்ப்பு

மேற்கத்திய மயமாக்கல், மதசார்பின்மை என்பவற்றுக்கு எதிரான தமது நிலைப்பாட்டில் தமது அரசியல், சமூக , பொருளாதார நலன்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு மாற்று வழியாக, அமைந்தது இஸ்லாம். இஸ்லாமிய சீருடையை அணிவதற்கு அழைப்பு விடுத்த அந்த அகிலத்துவ அறைகூவலுக்குச் செவி சாய்த்தவர்களாகப் பெண்கள் ஹிஜாப் அணிலாயினர். [20.]

***3. (1) சமூகத்தை மேம்படுத்தல்:*** *மேற்கத்திய மயமாக்கல், மதசார்பின்மை என்பவற்றை நிராகரித்தல்; இஸ்லாத்தை மாற்று மார்க்கமாகத் தேர்ந்து கொள்ளல் என்ற நிலையின் தொடராக, ஹிஜாப் அணியும் பெண்கள் சமூக மேம்படுத்தலில் மிக முனைப்பாகச் செயல்படுகின்றனர் என்பது பரவலாகக் காணப் பட்டதோர் அவதானம். இதன் அடிப்படையில் ஹிஜாப் ஆனது சமூகத்தின் பல்வேறு தரங்களைச் சமப்படுத்தி அமைக்கும் ஒரு சாதனமாக அமைந்தது.[21] எகிப்திய பெண்கள், சமூகம் சிதைவுற்று விடாமல் நிலைபெற்றிருக்கும் வகையில் ஒழுக்கக் கேட்டிலிருந்தும் ஒழுக்கச் சிதைவிலிருந்தும் அதனைப் பாதுகாக்கும் முகமாகவே ஹிஜாப் அணிகின்றோம் என்ற எண்ணத்தோராயிருந்தனர் என்பார்* Williams.[22]

### *4. பொது வாழ்வின் பயன்களை அடைந்து கொள்ளல்.*

*அண்மைக் காலங்களில் ஹிஜாப் அணியத் தொடங்கியுள்ள பெண்கள் அனைவரும் மதாபிமான உறுதிப்பாட்டின் காரண மாகத்தான் அவ்வாறு செய்கின்றார்கள் என்பதற்கில்லை. அவ்வா றான பெண்களில் பலர் தொழுகையையே கடைப்பிடிக்காதவர் கள். பொது வாழ்வில் சுமுகமாகக் கலந்து கொள்ளவும், தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும், கௌரவத்தை ஈட்டிக் கொள்ளவும், ஆண்களின் தொந்தரவுகளிலிருந்து தம்மைக் காத் துக் கொள்ளவும் ஹிஜாப் எளிதாக வழி வகுக்கின்றது என அவர் கள் கண்டு கொண்டுள்ளார்கள்.*[23]

### *5. சொந்த அடையாளத்தை நிறுதல்*

*ஹிஜாப் அணிவதற்கு, குறிப்பாக மேற்குலகில் முஸ்லிம் பெண் கள் அதனை அணிவதற்கு, தன் சொந்த அடையாளத்தை நிறுவிக் கொள்ளும் எண்ணமும் உண்டு. பிரித்தானியாவின் இரண்டாவது தலைமுறையைச் சார்ந்த, 16 வயதில் ஹிஜாப் அணியத் தொடங்கிய ஆசியப் பெண்ணான நாதியாவைப் போல.... "ஹிஜாப் அணிவது எனது விசேஷத்துவமாக இருக்கிறது. அது ஓர் அடையாளச் சின் னம். அத்துடன் எனது மார்க்கம் எமக்கு மிக முக்கியமானதாக உள்ளது என்பதை அது உணர்த்துகின்றது."*[24]

### *6. பாரம்பர்ய வாழ்வமைப்பு*

*ஏராளமான முஸ்லிம் பெண்கள், குடும்ப கௌரவத்தைப் பேண அல்லது சமூக பாரம்பர்யம், பண்பாடு என்பவற்றை கண்ணியம் செய்யவே ஹிஜாப் அணிகின்றார்கள். அமெரிக்கா*

வின் கலைப்பட்டதாரியான, 35 வயதுடைய, ஸவூதி அரேபிய ஆசிரியை ஒருவர் கூறினார்: "ஆழ்ந்த புரிதலுடன் தான் நான் ஹிஜாப் அணிகின்றேன்." "உமது ஆழ்ந்த புரிதல் எதன் அடிப் படையிலானது?" என அவர் வினவப் பட்டார். "எனது பாரம்பர் யங்களுடன் இணைந்தவள் நான். ஒரு ஸவூதிப் பெண் என்பதன் அடையாளமாக அமைந்தது ஹிஜாப். ஸவூதி அரேபிய கலாச் சாரத்து விழுமியங்கள், நெறிமுறைகள் என்பவற்றை அடையாளப் படுத்தும் தெளிவானதோர் ஆதாரமே ஹிஜாப் . எனது மகளுக்கும் அதை அணியும்படி நான் அறிவுறுத்துவேன்." [25]

### 7. அரச நியமங்கள்

அரச நியமங்கள் ஹிஜாபை வலியுறுத்துவனவாக அமைந்தன. இதனை 1979-ன் ஈரானியப் புரட்சியின் பின்னரும், ஆப்கானிஸ் தானில் 1998-ல் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் னரும் கண்டு கொள்ள முடிந்தது.

## ஹிஜாப் என்பதன் அர்த்தம் - மேற்குலக ஊடக நோக்கு

ஹிஜாப் அணிவதற்கு உந்துதலாக அமையும் சமூகவியல் காரணிகள், கருத்துகள் என்பவற்றுக்கும், மேற்குலக ஊடகங்கள் கற்பிக்கும் காரணிகள், கருத்துகள் என்பவற்றுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கண்டு கொள்வது இலகுவானதொரு கருமம். மேற்கத்திய ஊடகங்களைப் பொறுத்த வரை ஹிஜாப் என்பது அடக்குமுறை.

இஸ்லாமிய அடிப்படைவாதம் எனக் காட்டப்படும் அத் துணை கொடூரங்கள், பயங்கரவாதம், வன்முறை, காட்டுமிராண் டித்தனம், பிற்போக்கு வாதம், அத்தனையையும் சுட்டி நிற்பது அது. ஏற்கனவே நிர்ணயமாக்கப்பட்டுவிட்ட இந்தக் கருத்தாடலுக்கு இயைந்ததாகவும் சார்பாகவுமே அனுபவ ரீதியான விவகாரங்கள் இணைக்கப்பட்டுக் காட்டப்படுகின்றன.

காலனித்துவ காலத்தில் கீழைத்தேயம் முழுவதற்கும் ஓர் அடையாளமாகவே ஹிஜாப் அமைந்திருந்தது. அது போலவே, 1990-களில் இஸ்லாமிய அடிப்படை வாதிகளது கொடூரங்கள் அனைத்தினதும் ஓர் அடையாளமாகவே ஹிஜாப் சித்தரிக்கப்பட லாயிற்று. 'இஸ்லாத்தின் ஹிஜாப் அச்சுறுத்தல்'[26], 'ஹிஜாபிப் பெண்கள்: இஸ்லாமியப் போராளிகள், சட்டபூர்வமான அடி மைத்துவ யுகத்தின் பால் பெண்களைத் தள்ளுகின்றார்கள்'[27], 'ஹிஜாப் ஒரு சதி, எவ்வாறு இஸ்லாமிய வாதிகள் எம்முள்

ஊடுருவுகின்றார்கள்?'[28], 'இஸ்லாத்தின் ஹிஜாப் பயங்கரவாதம்'[29], 'நம்பிக்கையின் செயல்பாடா அல்லது சமூகத்தின் மீதான மறை வான பயங்கரவாதமா?'[30], 'அமைச்சர் கூறுகின்றார்: பிரான்ஸிய பாடசாலைகளில் சமூக உறவுகளுக்கு ஹிஜாப் ஓர் அச்சுறுத்தல்'[31], 'நவீன சட்டம்: ஹிஜாப் அணியுங்கள் - உயிரோடு இருங்கள்'[32], 'ஹிஜாபில் சிக்குண்டுள்ள பெண்கள்'[33] -இவ்வாறாகவே ஊடகத் தலைப்புகள் அமைந்திருந்தன.

இஸ்லாத்தில் பெண்கள் தாழ்வாகக் கருதப்படும் எண்ணத்தை உறுதிப் படுத்திக் காட்டும் வகையிலேயே ஹிஜாப் தொடர்பு படுத் திக் காட்டப்படுகின்றது[34] 'இலஞ்சம்,[35] அச்சுறுத்தல்கள், வன் முறை என்பன மூலம் பெண்கள் மீது பலவந்தமாகத் திணிக் கப்படுவது ஹிஜாப்'[36] என்றெல்லாம் கூறப்பெற்றாலும், நாம் முன்னர் கண்டது போல, முஸ்லிம் நாடுகளின் பெண்கள் எவ்வித வற்புறுத்தலும்இன்றி, தத்தமது விருப்பத்துடன் சுயமாகவே இதனைத் தேர்ந்து கொண்டுள்ளனர். Scroggins, Goodwin, Brooks ஆகியோரின் பார்வையில் இந்தப் பெண்கள் அறிவிலிகள், ஏய்க்கப் பட்டவர்கள், தன்னியல்பு இழந்தவர்கள்; பெண்களுக்கு எதிரான சிந்தனைக்குச் சார்பாக இவர்கள் செயல்படுவதால் ஆண்களைப் போலவே இவர்களும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். [37]

ஹிஜாப் பற்றிய ஆய்வுகளுக்கு உட்பட்ட இளம் பெண்கள் தமது வயது, சமூக, பொருளாதார பின்னணி என்பன காரணமாக மிகவும் இலகுவாகத் தீவிரவாதத்தின் பால் ஈர்க்கப்பட்டுள்ளார் கள் எனக் கருதுகின்றார் Goodwin. அவரது 'பாரிய பெரும்பான் மை', மேலே குறிப்பிட்ட அறிஞர்களது நேர்காணலிலிருந்து தப்பித்துக் கொண்டுள்ளனர் போலத் தெரிகின்றது.[38] Brooks இன் நோக்கில் தமது நாட்டை இருள் சூழ்ந்த கடந்த காலங்களுக்கு மீட்டுக் கொண்டு செல்பவர்களாகவே இவர்கள் சித்தரிக்கப் படுகின்றனர்.

மறுபுறத்தில் நடந்துவரும் ஆய்வுகள் குறித்து மேல்நாட்டு ஊடகங்கள் எவ்விதக் கவனமும் செலுத்துவதாக இல்லை: Macleod கூறுவார்: கெய்ரோவின் அடிமட்ட சமூகத்தில் ஹிஜாப் மீள் பரவலாகி வருவது, எகிப்திய இஸ்லாமிய இயக்க நேரடித் தொடர் புகளினால் அல்ல.[39] Brenner கூறுவார்: ஜாவாவின் பெண்கள் எதிர்காலம் பற்றிய முன்னோக்கு உடையவர்கள்; பகுத்தறியும் திறன் படைத்த நவீனத்துவமானவர்கள்; தம்மைச் சீர்படுத்திக் கொண்டு தமது சமூகத்தை முன்னேற்றப் பாடுபடுபவர்கள்.[40]

## அத்தியாயம் 4

### மெர்னிஸியும் ஹிஜாப் பற்றிய உரையாடலும்

மொரோக்கோவின் பெண்ணியலாளர் Fathima Mernissi யின் இரண்டு நூல்கள் ஹிஜாப் பற்றிய கருத்தினைத் தெரிந்து கொள்ள மேற்குலகில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒன்று, Beyond the Veil. மற்றது The Veil and the Male Elite.[41].இரண்டு நூல்களிலும் மெர்னிஸி, பெண்கள் மீதான, அநீதியான ஆண் ஆதிக்கத்தின் அடையாளமே ஹிஜாப் என வாதிடுகின்றார். அவரது கருத்துகள் சற்று ஆழமாகவே ஆய்வு செய்யப்பட வேண்டுவன.

மொரோக்கோவில் தான் வளர்ந்து வந்த காலத்தின் போதான துயர அனுபவங்கள் மெர்னிஸியின் கருத்துகள் அனைத்திலும் ஆழமாகப் பதிந்துள்ளன. அவரது சுய சரிதையின் சில விவரணங்கள் மறைத்தலோடு இணைந்த அவரது அனுபவங்களைக் காட்டி நிற்கின்றன.

இரண்டாம் உலக மகா யுத்த காலம். ஒன்பது வயதுகூட ஆகாத நிலையில், அவரும் அவரது உடன்பிறவா சகோதரியும் தங்கள் தலைமயிர் நிறத்தை மாற்றிக் கொள்ள அல்லது தலையை மறைத்துக் கொள்ளத் தீர்மானம் செய்து கொண்டனர் - தம்மை ஹிட்லரிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக. ஏனென்றால், ‘கரு நிற மயிர்களையும், கரு நிறக் கண்களையும் வெறுத்த’ ஹிட்லர், ‘கரு நிற மயிர் கொண்ட மக்கள் குடியிருப்புகள் அனைத்தையும் விமானத்திலிருந்து குண்டுகள் வீசி அழித்து வந்தார்’.[42] மெர்னிஸி தன் தாயாரின் முக்காடு ஒன்றனை அணிந்து கொள்ளத் தொடங்கினார். இதனைக் கண்டு கோபங் கொண்ட தாயார், அதனைத் தலையிலிருந்து உருவியெடுத்துக் கூறினார்: “நீ ஒரு போதும் தலையை மறைக்க மாட்டாய் . . நான் சொல்வது உனக்கு விளங்குகிறதா? ஒரு போதும்... ! மறைத்தலுக்கு எதிராக நான் போராடிக் கொண்டிருக்கிறேன். நீயோ மறைத்துக் கொள்ளப் பார்க்கிறாய்.... இது என்ன பேதைமை! ஆளாளப்பட்ட அந்த ஹிட்லரே உன் முன்னால் வந்து நின்றாலும் கூட உனது தலையைத் திறந்தவளாகவே நீ நிற்க வேண்டும். தலையை மறைத்துக் கொள்வதும், ஒளிந்து கொள்வதும் உனக்கு உதவப் போவதில்லை. மறைத்துக் கொள்வது ஒரு

*போதும் ஒரு பெண்ணின் பிரச்சினைகளைத் தீர்த்து விடப் போவதில்லை. அவளை எளிதாக அடக்கிக் கொள்ளலாம் என் பதையே அது உணர்த்துகின்றது. நானும் உனது பாட்டியும் இந்தத் தலை மறைக்கும் விவகாரத்தில் நன்றாகக் கஷ்டப்பட்டுள்ளோம். அது ஒரு போதும் எமக்கு உதவப் போவதில்லை. எனது புதல்வியர் நிமிர்ந்து நிற்க வேண்டும். அல்லாஹ்வின் இந்த உலகில், நட்சத் திரங்களின் மீது தங்கள் கண்களைப் பதித்தவர்களாக அவர்கள் நடந்து செல்ல வேண்டும்.''*[43]

*இவ்வாறான ஒரு சூழலில், ஓர் இளம் சிறுமி, மறைத்தல் குறித்து மாறுபட்ட கருத்துகளேயன்றி வேறு எதனைத்தான் கொண்டிருக் கலாம்? தன்னை ஒரு பிற்போக்குவாதியாக அல்லது தேசிய வாதத்தின் எதிரியாக மக்கள் மதிப்பிட்டு விடக்கூடாது எனக் கருதும் ஓர் இளம் பெண் மறைத்துக் கொள்ளும் தீர்மானத்தை எடுப்பாளா? இத்தகு நினைவுச் சூழலில் இருந்து இன்னமும் மீண்டு கொள்ள இயலாதிருக்கும் மெர்னிஸி, தனது துயரத்தின் மூல காரணத் தேட்டத்திலேயே இன்னமும் ஆழ்ந்திருக்கின்றார். தனது பால்ய கால துயரங்களிலிருந்தும் மீள்வது எவ்வாறு? அவற்றை எவ்வாறு மாற்றியமைக்கலாம்?*

*அவ்வாறான ஒரு நிலைமையைக் கண்டிக்காது விடலாமா? வெளியில் செல்லும் போது தமது முகங்களை மறைத்துக் கொள்ள வற்புறுத்தப்பட்ட, கல்வியறிவு புகட்டப்படாத அவரை யொத்த பெண்கள், ஹிஜாப் அடக்கு முறையானது என்ற ஒரு சமன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளமை தெளிவாகத் தெரி கின்றது. மெர்னிஸியின் பிரச்சினை, மொரோக்கோவில் தனது மறைத்தலின் அனுபவத்தை அவர் அணுகும் முறையில் உள்ளது. அவரது அனுபவம் மட்டுமே ஹிஜாபிய அனுபவம் என்றும், ஹிஜாபின் அடிப்படைக் கருத்தும் அது மட்டுமே என்றும் தான் அவர் கருத்துக் கொண்டுள்ளார். ஹிஜாப் சம்பந்தமான பல தரப் பட்ட நடைமுறைகளையும் பல்வேறுபட்ட உரையாடல்களையும் கவனத்தில் கொள்ள மெர்னிஸி தவறிவிட்டார்.*

*இருபதாம் நூற்றாண்டு மொரோக்கோச் சூழலின் சமூக, அரசியல், பொருளாதார முறைமையுடன், ஏழாம் நூற்றாண்டின் அரேபிய முறைமையொன்றனைச் சமன் படுத்தும் பொருத்தப் பாடற்ற தொரு வரலாற்று அணுகு முறையையே அவர் கைக் கொண்டுள்ளார். இருபதாம் நூற்றாண்டு மொரோக்கோவில்*

*காணக்கிட்டிய பிரதிபலனே, இறைதூதர் அவர்கள், சாத்தியமான இலட்சிய, இஸ்லாமிய நிலைப்பாடென எதிர்வு கூறினார்கள் எனத் தனது நிலைப்பாட்டை நியாயப் படுத்திக் கொள்கின்றார் மெர்னிஸி.*

*மொரோக்கோவில் நிகழ்ந்தவையே முஸ்லிம் உலகம் முழுவதிலும் நிகழ்ந்தன எனக் காட்டவும் முனைகின்றார் அவர். அதனாலேயே அவர், முஸ்லிம் சமூக அமைப்பில் ஹிஜாப் குறித்துப் பேசும் போது, இந்தோனேஷியா, பங்களாதேஷ், மொரோக்கோ, ஸவூதி அரேபியா முதலாய நாடுகளிலெல்லாம் காணும் அமைப்பு, ஏழாம் நூற்றாண்டின் அரேபிய ஆரம்ப முஸ்லிம் சமூகத்தினை ஒத்ததே எனக் காட்ட முனைகின்றார்.*[44]

*ஆக, மெர்னிஸியுடன் நாம் முரண்படும் இரண்டு பிரதான அம்சங்கள் காணப்படுகின்றன. 1. இஸ்லாமிய நடைமுறைகள் எவ்வெவ்வாறெல்லாம், வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் தத்தமது கால - தேச வர்த்தமானங்களுக்கு இயைய வேறுபடப் பயிற்சிப் படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கருத்தில் கொள்ளாது, மதவியல் நடைமுறைகள் மீது பொருத்தமற்ற வரலாற்று அணுகுமுறையொன்றைக் கையாள்வது. 2. ஹிஜாப் பற்றிய பல் பரிமாணங்களுடனான பரந்து பட்ட உரையாடல் களைக் கருத்தில் கொள்ளத் தவறியுள்ளமை.*

*பெண்கள் மீதான இஸ்லாத்தின் அடக்கு முறையின் ஒரு சின்னம் தான் ஹிஜாப் எனப் பரவலாக நிறுவப்பட்டு வரும் கருத்தினை எதிர்கொள்வதானால், நாம் சில வினாக்களை விடுக்க வேண்டியிருக்கும். பெண்களுக்கு எதிரானது என மெர்னிஸி கண்டனம் செய்யும் சமூகம் ஒன்றனைத் தான் இஸ்லாம் வேண்டி நிற்கின்றதா அல்லது பெண்களுக்குச் சார்பானவையாக அமையும் மாற்று அமைப்புகள் காணப்படுகின்றனவா?*

*மெர்னிஸியின் வாதங்கள், இஸ்லாத்தின் மூல ஆதாரங்களான குர்ஆனினதும் ஸுன்னாவினதும் நிலைப்பாட்டுக்கு முற்றும் முரணானவையாக அமைந்துள்ளமையைக் காணலாம். அவருடனான எமது வாதம், முஸ்லிம் சமூகங்களில் பெண்களை அடக்கியொடுக்கும் நடைமுறைகளும் உரையாடல்களும் பரவலாயுள்ளன என்ற கருத்தை மறுத்துரைக்கும் முனைவு ஒன்றல்ல; (குர்ஆனிய நோக்கு பெண்களுக்கு எதிரானதா இல்லையா? என்ற) இஸ்லாமிய நியமங்கள் பற்றியதாகவே அது இருக்கும். பெண்களுக்குச்*

*சாதகமாயமைந்துள்ள எந்த ஒரு குர்ஆனிய விளக்கமும், மௌர்னி ஸியின் நிலைப்பாட்டுக்கும், பெண்களை அடக்கு முறைக்குள் ளாக்கும் எந்தவொரு விளக்கத்துக்கும் எதிரானதாகவே நிலை பெற்றுள்ளது.*

## *குர்ஆனிலும் ஸுன்னாவிலும் பெண்களும் பாலியலும்*

*'பெண்களின் பாலியல் ஆபத்தானது; ஆகவே அது கட்டுப் படுத்தப்பட வேண்டும்' என்ற தனது முடிவின் அடிப்படை யிலேயே ஹிஜாபுக்கு எதிரான மௌர்னிஸியின் வாதம் அமைந் துள்ளது: பெண்மை தெய்வீகத்துக்கு எதிரானது அல்லது அதனை மாசுபடச் செய்வது; இஸ்லாம் கணவன் - மனைவிக்கிடையிலான எதிர்பாலுணர்வுக்கு எதிரானது என்பார் மௌர்னிஸி. இறை வனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்புக்கும் பெண்கள் ஓர் அச்சுறுத்தல் - எனவே பெண்கள் மறைக்கப்பட்டு, தனிமைப் படுத்தப்பட்டு ஒதுக்கப்படல் வேண்டும்.[45]*

*குர்ஆனையும் ஸுன்னாவையும் ஊன்றிக் கவனித்தால், இந்த வாதங்கள் அனைத்தும் நிலைத்து நிற்கக் கூடியனவல்ல என்பது புலனாகும். "அவாக்கள் அனைத்தும் உள்ளத்தைக் கடினப்படுத் துகின்றன. பாலியல் அவா உள்ளத்தை மென்மைப்படுத்துகின்றது" என இமாம் நவவி தெளிவுறுத்துவது போல.[46] இஸ்லாம் பாலியல் மனப்பாங்குக்கு சாதகமான, அதனை ஊக்குவிக்கும் பாங்கின தாகவே இருக்கின்றது என்பார்* Winter .

*பெண்கள் ஆபத்தான பாலியல் பிறவிகள் எனக் குர்ஆனில் எங்குமே கூறப்படவில்லை. ஆண்களும் பெண்களும் சமமானவர் களே; ஒரே ஆத்மாவிலிருந்தே அவர்கள் படைக்கப் பெற்றார்கள்; இருவருமே தெய்வீக உயிர்ப்பினைப் பெற்றுக் கொண்டார்கள். ஆக, இஸ்லாம் எவ்வாறு பெண்கள் தெய்வீகத்துக்கு எதிரானவர் கள் எனக் கூறலாம்? ஆண் - பெண் இரு சாரார்க்கும் இடையிலான பரஸ்பர அன்பு, இணக்கம் என்பன குறித்து ஏராளமான குர்ஆனீய வாசகங்கள் உள்ளன. (உதாரணம் : குர்ஆன் 30:21). பரஸ்பர அன்பு, இரக்கம், கருணை, கணவன் - மனைவிக்கிடையிலான இணக்கம் என்பன குறித்துப் பரவலாகப் பேசி வருகின்றது குர்ஆன். என்றாலும் மௌர்னிஸியின் கண்ணோட்டத்தில் அவை அனைத் தும் சாத்தியமற்றன. "பொதுவாக ஆண் - பெண்களுக்கிடை யிலான அன்பு, குறிப்பாக கணவன் - மனைவிக்கிடையிலான*

அன்பு. இதனை நாகரிகத்தின் பரம விரோதியென்றே முஸ்லிம் அமைப்பியல் கூறுகின்றது" என்பார் மெர்னிஸி.[47]

வலியுறுத்திக் கூறுவதானால், உடலையும் அதன் அவாக்களையும் பொறுத்த வரையில் எதுவித தீங்கோ, விரும்பத் தகாததோ இல்லை. இழைக்கப்பட்ட தவறில் பங்கெடுத்திருந்தாலும், சுவனத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்கு அவள் ஒரு காலாக இருக்கவில்லை - அவரது துணைவரைப் போல. இறைவன் அவர்களை உடனடியாகவே மன்னித்து விட்டமையினால், ஆதி முதல் பாவம் என்ற ஒன்றுக்கு அவர் ஆட்படவில்லை. ஏனைய மரபுகளில் போல அவர் மீது களங்கம் கற்பிக்கப்படவில்லை. அவா என்பது பாவமோ, பண்பீனமோ அல்ல. நடத்தைகளின் தன்மைகளைத் தீர்மானிப்பது சந்தர்ப்ப சூழல்களே. அதாவது, திருமணத்தின் ஊடாக பாலியல் அவாக்களைத் தீர்த்துக் கொள்வது ஊக்கப்படுத்தப்படுகின்றது. அதற்கான வெகுமதியும் அளிக்கப்படுகின்றது. அவ்வாறே திருமணத்துக்கு வெளியே பால் உறவு வைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. விசுவாசி ஒருவரின் கருமங்கள் அனைத்தும் வழிபாடாகவே அமையும் - அவை சரியான எண்ணத்தில் செய்யப்படக் கூடுமாயின். ஆக, பாலியல் உறவுகள் அல்லாஹ்வுக்கும் பெண்களுக்கும் இடையில் பகையுணர்வை ஏற்படுத்துவனவல்ல; அது சட்டபூர்வமானதாக அமையும் போது, ஆண் பெண் இருபாலாருக்குமே இறைவனிடமிருந்து வெகுமதிகள் கிட்டுகின்றன. ஆக, ஹிஜாப் என்பது பெண்மைக்கு எதிரானதொரு சின்னமல்ல; பெண்மைத்துவத்தை அழித்துவிடும் முனைப்புக் கொண்டதுமல்ல; விசுவாசிகளின் சமூகத்திலிருந்து பெண்களை ஒதுக்கி வைக்கும் ஒரு சாதனமுமல்ல.

ஆக, ஹிஜாப் ஆனது, பெண்களைத் தமது நம்பிக்கை, பொது வாழ்வமைப்பு முதலான வற்றிலிருந்து ஒதுக்கி வைக்கிறது என்ற மெர்னிஸியின் வாதம், முன்னைய அத்தியாயங்களில் நாம் கண்ட பெண்களின் அபிப்பிராயங்கள், நேர்காணல்கள் மூலம் மறுக்கப்படுகின்றமையைக் காணலாம். ஹிஜாப் அணிந்த பெண்களின் குரல்களை அலட்சியம் செய்து, வஞ்சனைக்கு ஆளாக்கப்பட்டவர்களாக அவர்களைச் சித்தரித்துக் காட்டுவதன் மூலம், மெர்னிஸி, 'ஹிஜாபிய பெண்கள்' குறித்த காலனித்துவ, கீழைத்தேயவியல் கருத்துகளையே மீள் பதிவு செய்கின்றார். குறைபாடுகள் நிரம்பியது அவரது வாதம். ஹிஜாப் சம்பந்தப்பட்ட சமூகவியல் சிக்கல்களை அலட்சியம் செய்கிறது அது.

# அத்தியாயம் 5

## ஹிஜாப் பற்றிய ஒரு மாற்றுக் கோட்பாடு

ஹிஜாபுக்குக் கொடுக்கப்படுகின்ற அர்த்தங்கள் மீது சமூக சூழல் செலுத்தி வரும் செல்வாக்கும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இருபத்தியோராம் நூற்றாண்டின் முதலாளித்துவ கலாச்சாரத்துத் தாக்கத்தின் மத்தியில் ஹிஜாபின் அர்த்தம் என்ன வெனக் காண வேண்டியுள்ளது. உடல், பொருள் என்பவற்றின் மீதான முதலாளித்துவத்தின் அழுத்தம் காரணமாக, ஹிஜாப் அணிவது, பெண்களுக்கு வலிமையூட்டி விடுதலை அளிக்கின்ற ஓர் அனுபவமாக இருக்க முடியும் என்றே நான் கருதுகின்றேன். கூர்த்து நோக்கும் ஆண்களின் இயல்பு, பெண்ணுடம்பை வர்த் தகப் பொருளாக்கும் முதலாளித்துவ முனைப்பு என்பன குறித்த பெண்ணியலாளர் தம் வாதங்களை வைத்துக் காணும் போது அவ் விரண்டினதும் பாதக விளைவுகளிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்ளத் தக்கதொரு சாதனமாக ஹிஜாப் அமைவது புலனாகும். 'ஹிஜாப் ஓர் ஆடை என்ற வகையில் அது பெண்மையை அடக்கு கின்றது; பெண்களைப் பாலியல் சின்னங்களாக ஆக்குகின்றது; அவர்களின் சொந்த விருப்பு - வெறுப்புகளுக்கு மறுப்புத் தெரிவிக் கின்றது' போன்ற பொதுவான விமரிசனங்கள் இ, ஈ, உ பகுதிகளில் மறுத்துரைக்கப்படுகின்றன. நவீன பொருள் முதல் வாதத்தினால் சிதைவுக்குள்ளாக்கும் விளைவுகளைத் தாக்குப் பிடித்து, விசுவாசி களது பாரம்பர்யத்தை ஈட்டிக் கொள்ளும் ஒரு நுழைவாயிலே ஹிஜாப் என்பதை நிறுவுகின்றது பகுதி ஊ.

### அ. ஹிஜாபும் விடுதலையும் ஆ..ஹிஜாபும் ஆண்களின் கூர்த்த நோக்கும்.

நஹீத் முஸ்தபாவும், ஸுல்தானா யூசுப் அலியும் பிரதான பத்திரிகைகளில் எழுதும் போது, மேற்கத்திய நுகர்வோர் கலாச் சாரத்தின் அடக்குமுறை அம்சங்களில் நின்றும் விடுதலையை ஈட்டித் தருவதே ஹிஜாப் என்ற கருத்தை முன் வைக்கின்றனர். அதன் மூலம் அவர்கள் பெண்ணியலாளரின் இரண்டுவிதமான பகுப்பாய்வுகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.[48]. ஒன்று, முதலாளித்துவ கலாச்சாரத்தில் பெண்ணுடல் காட்சிப் பொரு ளாகவும் வர்த்தகப் பொருளாகவும் பயன்படுத்தப்படுவது.

அடுத்தது, அழகு பற்றிய கருத்தியலை மேம்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு இழைக்கப்படும் பாதகங்கள்.

Orbach, Bordo, Wolf, Ussher, Mackinnon, Dworkin முதலாய பெண்ணியவாதிகள் பலர், மேற்கத்திய கலாச்சாரத்தில் பெண் களின் பிரதிமை குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளனர்.[49] போகத் துக்குரிய ஒரு பொருளாகப் பெண்ணுடலைக் கொண்டு அது, விளம்பரம், கலை, சினிமா, ஆபாசம் எனப் பல துறைகளிலும் பயன்படுத்தப்படுவதனை அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளனர். எதிர்ப்பாலாருடனான ஆண்களின் வேட்கை யையும், பலுணர்ச்சியையும் திருப்திப் படுத்தும் விதத்திலும், தூண்டிவிடும் விதத்திலும் பெண்களின் உடல்கள் வெளிப்படுத்திக் காட்டப்படுகின்றன: பெண் அழகானவள்; அவளது உடல் பாலி யல் உணர்வுகளைத் தூண்டுவது. கலையிலும் கூட, குறிப்பாக, பெண்களின் நிர்வாண நிலைச் சித்திரங்களிலும், ஆபாச சித்தரிப் புக்களிலும், பெண் அடங்கிச் செல்பவளாகவும், இசைந்து கொடுப்பவளாகவும் காட்சிப்படுத்தப் படுகின்றாள்.[50]. அவள் ஆணின் உடைமை; அடைந்து கொள்ளப் படுவதற்காக இருப்ப வளே அவள். நிழற்படங்கள், சினிமா என அனைத்துமே ஆண் களின் பாலியலுக்குப் பயன்படும் போகப் பொருளாகவே பெண் களைக் காட்டுகின்றன.[51]

பெண்களின் இவ்வாறான சித்தரிப்பு கலையோடு மாத்திரம் மட்டுப்பட்டில்லை. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கி ன்றன பெண்ணுடல் படங்கள். மிக மிக அரிதாகவே பெண் இல்லா விளம்பரங்களைக் காண முடியும். நீச்சல் உடையிலான ஒரு பெண் மோட்டார் காரின் கதவினை வருடுதல், தானியப் பெட்டியி லிருந்து பெண்ணின் கால்கள் நீட்டிக் கொண்டிருத்தல் என்பன அன்றாட விளம்பரங்களில் காணப்படுகின்றன.[52] உற்பத்தியான ஒரு பொருளின் விற்பனைக்கும், பாலுணர்வூட்டும் பெண்ணின் உடலுக்கும் இடையிலான தொடர்புகள் எதுவும் இல்லை. உடல் இங்கு பயன்படுத்தப்படுவது கவனத்தை ஈர்ப்பதற்கு மட்டுமே. எதிர்பாலாருடனான விருப்பு மிகப்பெற்ற ஆணின் உணர்வு களைத் தூண்டுவதுடன் பெண்கள் ஆண்களின் போகப் பொருட் கள் என்ற கருத்தை வலுவூட்டுவனவாகவே இவை அமைந்துள் ளன. பெண்களை இவ்வாறு சித்தரிப்பது, அவர்களது மானுட அந்தஸ்தை மறுத்து, வெறும் போகப் பொருளாகவே அவர் களைக் கொள்கின்றது.

*இத்தகைய நிலைமையை மாற்றியமைத்துப் பெண்களின் நிலைமையை சீர்செய்தல் பெண்ணியலாளரின் பிரதான முனைவாக அமைய வேண்டும்.*

*வர்த்தகப் போகப் பொருளாகப் பெண்களைக் கொள்ளும் பொறிகளை மீறி, பெண்களுக்கு அவர்களது மானுட அந்தஸ்தை ஈட்டிக் கொடுக்கும் ஒரு சாதனமாகவே ஹிஜாபைக் கொள்கின்றார்கள் முஸ்தபாவும், யூசுப் அலியும். ஆண்களின் கூர்த்த பார்வையினின்றும் விலக்கி வைப்பதோடு, அழகு விளையாட்டின் இழிகுணங்களிலிருந்தும் ஹிஜாப் பெண்களைப் பாதுகாக்கின்றது என்பது அவர்களது நிலைப்பாடு. அழகு விளையாட்டு என்பது, தம்மைச் சூழவுள்ள அழகிய பெண்களின் பிரதிமைகளைத் தமக்குள் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற பெண்களின் முனைவாகும். நீண்ட தளர்வான ஆடைகளை அணிவதாலும், தலையைத் தாவணி போன்ற துணியினால் மறைத்துக் கொள்வதாலும், நவநாகரிகக் கவர்ச்சிகளினதும், பெண்களைச் சுரண்டும் ஏனைய நிறுவனங்களினதும் ஆதிக்கத்திலிருந்து தாம் விடுதலை பெற்றுக் கொண்டுள்ளதாகப் பெண்கள் உணர்கின்றார்கள் என்பார் யூசுப் அலி. அழகு விளையாட்டிலிருந்து வெளிவருவதைத் தெரிவு செய்து கொள்வதன் மூலம், தமது சொந்த பாரம்பர்யத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஒரு சின்னத்தை, பிற சூழலில் அடக்குமுறையாகக் கருதப்படும் ஒன்றைத் தமது அடையாளமாகப் பெண்கள் அரவணைத்துக் கொள்கின்றார்கள்.*

*எங்கும் வியாபித்து ஆதிக்கம் செலுத்தி வரும் மேற்கத்திய கலச்சாரம் கற்பிப்பது தான் என்ன? பெண்கள் நவ நாகரிக ஆடைகள் அணிய வேண்டும்; உடல் பருமனைக் குறைத்து அழகாகத் தோற்றமளிக்க வேண்டும்; நவீன உலகின் அடையாளச் சின்னங்களாக அமைய வேண்டும். இத்தகு அபாரமான அழுத்தங்களின் மத்தியில் ஹிஜாபைத் தேர்ந்து கொள்பவர்கள் ஒரு சிறுபான்மை அடையாளத்தை உருவமைக்கின்றார்கள். பாரிய சக்தி வாய்ந்த அழகியல் கவர்ச்சிக்கு எதிராக நின்று அதனைத் தடுத்து நிறுத்த அவர்கள் இஸ்லாமிய பாரம்பர்யத்தைப் பயன்படுத்துகிறார்கள்; அதற்கெதிராகப் போராடுகின்றார்கள்; அதனைத் தோற்கடிக்கப் பாடுபடுகின்றார்கள். இவர்களுக்கும் இவர்களையொத்த முஸ்லிம் பெண்களுக்கும் மேற்குலகில் ஹிஜாப் என்பது ஓர் எதிர் சாதனம். 'தங்கள் மார்பகங்களைப் பகிரங்கமாக வெளிக்காட்டும் உரிமையைப் பெற்றுக்கொள்வதுடன் பெண்கள் சமத்துவத்தை ஈட்டிக்*

கொள்ளலாம் எனச் சிலர் உங்களை நம்ப வைக்க முனைகின் றார்கள்; அப்படியெல்லாம் அவர்கள் சமத்துவத்தை அடையப் போவதில்லை' என்பார் முஸ்தபா. ஹிஜாப் தவறான உணர்வு களைக் கொண்டது என்ற கருத்துக்கு இளம் பெண்களின் ஆதர வைத் தேடும் பெண்ணியலாளர்களது நிலைப்பாட்டுக்கு எதி ரானது இது.

### இ. ஹிஜாபும் பெண்மைத்துவமும்

பெண்ணுடலை வெளிக்காட்டுவது சரியானதும் ஏற்புடையது மாகும் எனக் கருதுவோரின் கண்ணோட்டத்தில் 'அதை' மறைப் பது பெண்மையையும் அழகையும் அடக்குவதாகவே தோற்றுகின் றது. ஏனெனில் 'உன்னிடத்தில் அது இருக்குமானால் ஆடம்பர மாக அதனை வெளியில் காட்டு' என்பது தான் மேற்கத்திய கலாச் சாரத்தில் பெண்களுக்கான சாதாரண செய்தி. தம்மை மறைத்துக் கொள்ளும் முஸ்லிம் பெண்களின் கவர்ச்சியில்லா பழுப்புத் துணி ஆடைகள் அவர்களது பெண்மைத்துவத்தையும், பாலியல் தன்மை யையும் மறுதலிக்கின்றனவாகவே உள்ளன என்பது மேற்குலக நோக்கு.

இத்தகு கருத்துக்கு முரணாக நான்கு அம்சங்களை முன்வைக்க நான் விரும்புகின்றேன். முதலாவதாக, பெண்கள் எல்லா நேரங்களி லும் ஹிஜாப் அணிந்தவர்களாக இருப்பதில்லை. பொதுவாக அவ்வாறுதான் சித்தரிக்கப்பட்டாலும் ஹிஜாப் என்பது பொது வான அல்லது தனிப்பட்ட ஆடையல்ல. இது, பார்க்கக் கூடிய அல்லது பார்க்கக் கூடாத உறவினர் அல்லது உறவினரல்லாதார் சம்பந்தப்பட்ட விவகாரம். ஆக ஒரு பெண், பெண்களுடன் மட்டு மே இருக்கும் வேளை அல்லது தனது குடும்பத்திலுள்ள ஆண் களுக்கு மத்தியில் இருக்கும் வேளை தன்னை மறைத்துக் கொள் வதில்லை. அவ்வாறே, உறவினரல்லாத ஆண்களின் கூர்த்த நோக்கு கள் இல்லாத வேளையிலும் அவள் மறைக்க வேண்டிய அவசிய மில்லை. இரண்டாவது, பெண் தன் கணவருக்கு தனது உடல் அழகைக் காட்டி மகிழ்விக்கும் வண்ணம் அழகான ஆடை அணிந்து தன்னை அலங்கரித்துக் கொள்ள ஆர்வமூட்டப்படு கின்றாள். மூன்றாவது, ஒன்று கூடல்களின் போது ஆண்களும் பெண்களும் தனித்தனியே பிரத்தியேகமாகவே கலந்து கொள் வதால், பெண்கள் பொதுப்பட ஆண்கள் இல்லாச் சூழல்களி லேயே ஒன்று கூடுகின்றார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில்

பெண்கள் தங்களை நன்கே அலங்கரித்துக் கொள்கிறார்கள்; விதம் விதமாக வடிவமைக்கப்பட்ட ஆடையணிகளை அணிகின்றார்கள். திருமண வைபவங்களின் போது மணப்பெண்ணை அழகு மழை பொழிய விசேட ஆடைகள் அணிவித்து, அழகு சாதனங்கள் நிரம்ப, பூரண அலங்காரங்களுடன் மணமேடையில் அமர்த்தி வைத்திருக்கும் காட்சி கண்கவரும் ஒரு நிகழ்ச்சியாகும். இத்தகு சந்தர்ப்பங்களில் பெண்கள் தங்கள் கைகளுக்கு மருதாணி இட்டுக் கொள்வதில் காட்டும் அக்கறை தனியானது. பாடுவதும் ஆடு வதும்கூட சர்வ சாதாரணமாக நிகழ்வன. வெட்கத்துடன் அமர்ந் திருக்கும் மணப்பெண் தனது இடுப்பையும், உடலையும் ஆட்டி அசைத்து உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் இருக்க வேண்டு வதனை உணர்த்துவதற்காய், வயதான பெண்கள் ஆடிப்பாடி, கைதட்டி தமது இடுப்புகளையும், உடல்களையும் அசைத்து ஆடிக் காட்டுவதையும் நான் பார்த்திருக்கின்றேன். நான்காவது, ஹிஜா புக்கும், பகிரங்கமான சூழல்களில் ஆண்களின் கூர்த்த நோக்கு களைச் சமாளிப்பதற்கு ஏனைய பெண்கள் கைக்கொள்ளும் உபாயங்களுக்கும் இடையிலான - சில பெண்ணியலாளர்கள் மத்தி யில் விளங்கும் தலையை முற்றாக மழித்துச் சவரம் செய்து கொள்வது போன்ற - ஒருமைப்பாடும் கவனிக்கத் தக்கது.

### ஈ. ஹிஜாப், பாலியல் நிலை யதார்த்தத்துவம்

தாராண்மை வாதிகளும், பின் அமைப்பியல் பெண்ணிய லாளர்களும், மானுட நடத்தைகள், விருப்புகள் என்பன சமூக ரீதி யாகக் கட்டியெழுப்பப்படுவனவே என்றுதான் கொள்கின்றனர். ஆக, ஹிஜாப் போன்ற, பாரம்பர்ய ஆண் பெண் வித்தியாசங் களைப் போக்கிவிடுவது போல் தோற்றுகின்ற அனைத்து உபாயங் களும் சந்தேகக் கண்கொண்டே பார்க்கப்படுகின்றன.

மறைப்பதற்கான கட்டளை பற்றிய விரிவான விளக்கங்களை யோ, ஆண் - பெண் ஆடைகளின் வித்தியாசங்கள் சம்பந்தமான விவரங்களையோ குர்ஆன் அளிக்கவில்லை. என்றாலும் அது அளிக்கும் இரண்டு சிறு விளக்கங்கள் போதுமானதாக இருக்கும். ஸூறா 24-ன் 31-ம் வசனம்: ‘தம் முன்றானையை (ஹுமுரிஹின்ன) தம் மேல் சட்டைகளின் மீது போட்டுக்கொள்ள வேண்டும்’; ஸூறா 33-ன் 59-ம் வசனம்: ‘அவர்கள் தங்கள் மேலாடைகளைத் தங்கள் (முகங்கள்) மீது தொங்கவிட்டுக் கொள்ளுமாறு கூறு வீராக. இது, அவர்கள் கண்ணியமானவர்கள் என அறியப்

*படுவதற்கு மிக நெருக்கமானதாகும். அப்பொழுது அவர்கள் நோவினை செய்யப்பட மாட்டார்கள்.' பொது அரங்கிலான ஆண் - பெண் உறவுகளைப் பொறுத்து, பெண்களுக்குப் பாதகமான சூழல் காணப்படுகிறது என்றும், மேலால் அணியும் வெளியாடை அந்நிலைமையைச் சீர்படுத்திவிடும் என்பதுமே குர்ஆனின் நிலைப் பாடு என நான் கருதுகின்றேன்.*

*சரியாக, வெளியாடையானது எவ்வாறு, என்ன துணையைப் புரியலாம் என்பது துல்லியமாகச் சொல்லப்படவில்லை. என்றா லும் அத்தியாயம் 24-ன் 30,31-ம் வசனங்களோடு (தம் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தம் வெட்கத் தலங் களைப் பேணிக் கொள்ள வேண்டும்) இணைத்துக் காணும் போது, குர்ஆன், நாம் ஏற்கனவே பகுப்பாய்வு செய்த ஆண்களின் கூர்த்த நோக்கினை குறித்துக் காட்டி, ஆண் பாலுணர்வுக்கு பார் வை முதன்மையானதாக அமைகின்றது என்பதை உறுதி செய்கின் றதென நான் கருதுகின்றேன்.*

*ஆண்/பெண்; உயர்வு/தாழ்வு மனப்பான்மைகளை உள்ளடக்கி, பெண்களுக்கான வாழ்க்கை, கல்வி, வாக்களிக்கும் உரிமை முத லான அடிப்படை உரிமைகளை மறுப்பதற்காகப் பயன்படுத்தப் படும் போது யதார்த்தத்துவம் ஆபத்து நிறைந்தததாக அமைந்து விடுகின்றது. எவ்வாறாயினும் குர்ஆன் இவ்விதமான ஆண் - பெண் வேறுபாடுகளை மெய்யாகக் கொள்வதில்லை. ஆண் - பெண் இருபாலருக்கும் இடையிலான ஒருமித்த தன்மையையே குர்ஆன் வலியுறுத்துவதாக நான் கருதுகின்றேன்: "மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான்; அதிலிருந்து அதன் துணையையும் படைத்தான்" (4:1). பொது அரங்கில் பெண் கள் எதிர்நோக்க வேண்டியுள்ள நிலையான ஆபத்துகள் பற்றிய விவரத்தையே குர்ஆன் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. ஆண் - பெண் பிரிபாடுகள் பற்றிய ஒரு பிரஸ்தாபம் என்பதை விட, மறைத் தல் என்பது ஓர் உபாயமாகவே கொள்ளப்படுகின்றது. முதிய மாதர்கள் மறைக்காதிருக்க அனுமதி பெற்றிருக்கின்றார்கள் (24:60)*

*தாராண்மை வாத, பின் நவீனத்துவ வாதிகள், சமூகத் தொடர் பாடலானது காலப்போக்கில் ஆண்களின் தொல்லைகளிலிருந் தும் பெண்களுக்கு விடுதலை அளித்துவிடும் என்றே நம்புகின் றார்கள். மாறாகக் குர்ஆன், இது மானுடத்து இருப்பில் எப்போ தும் நிலைத்திருக்கும் ஓர் அம்சம் என்றே காட்டுகின்றது.* XY

குரோமசோம் கொண்டோர் பெண்களை அல்லலுக்குள்ளாக்கும் தகைமையர் என்ற உயிரியல் உறுதிப்பாட்டைக் குறிப்பதல்ல இது. அநேகமாக ஆண்கள் பெண்களைக் கௌரவமாகவே நடத்தி வருகின்றார்கள். உண்மையில் சமூக மயமாக்கல் என்பது, இத்தகு ஆண் நடத்தையை மேன்மேலும் பெருக்கி வைப்பதாகவே காணப் படுகின்றது.

ஆக, பெண்ணின் பாலுணர்வை ஹிஜாப் மறுப்பதில்லை; சமூகம் வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் விசேடமாகப் பொது அரங்குகளிலும் ஆண் - பெண் பாலுறவை கண்காணிப்புக்குள் வைத்துக் கொள்ள அது துணை பயக்கின்றது.

**உ. ஹிஜாபும் தேர்வும்**

மீள் மறைத்தல் இயக்கம் சார்ந்த அறிஞர்களும், பொதுவாக மேற்குலகத்தவர்களும் பெண்களின் மறைத்தலுக்கான தேர்வை சந்தேகக் கண் கொண்டே நோக்குகின்றனர். மறைப்பதைத் தேர்வு செய்து கொள்ளும் பெண்கள் பலவந்தப்படுத்தப்பட்டுள்ளார்கள், அல்லது நுணுக்கமாக மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளார்கள் என்ற உறுதியானதொரு மனப்பதிவு காணப்படுகின்றது. “நீ மறைப் பதைத் தேர்வு செய்திருந்தால் மறைத்தல் நல்லதொரு செயல் என நீ நம்பச் செய்யப்பட்டிருக்கின்றாய். என்றாலும் ஒரு பெண் என்ற வகையில் உனக்கு நன்மை பயப்பது என்ன என்று உணர்ந்திருந் தால் மறைப்பது நல்லதல்ல என்பதை விளங்கிக் கொள்வாய். எனவே மறைப்பதற்கான உனது முடிவானது, நீ மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கின்றாய் என்பதையே உணர்த்துகின்றது.” உண் மையில் நானும் இவ்வாறுதான் நினைத்தேன் - ஒரு முஸ்லிம் ஆகும் வரை.

ஒரு தனி நபரின் கலாச்சாரத்துக்கும் அவன் அல்லது அவள் தேர்வுகள் செய்து கொள்வதற்கும் இடையிலான உறவு முறை சிக்கலானது. ஒரு கலாச்சாரம் ஏற்றுக் கொள்வனவும் உள. ஏற்காது விடுவனவும் உள. இவ்விரண்டுக்கும் இடையிலான பரப்பெல்லைக் குள்ளேயே தேர்வு நடைபெற வேண்டியுள்ளது. முன்னம் நாம் கண்டது போல மேற்கில் பெருமளவு சுதந்திரம் இருந்த போதிலும் கூட, மக்களின் தேர்வுகளுக்குக் குறிப்பிட்ட வரையறைகள் இருக்கின்றன. அநேகமான மேற்கத்திய சமூகங்கள், பொது இடங் களில் பெண்கள் தங்களது மார்பகங்களை மறைப்பதையே எதிர்பார்க்கின்றன. (நிர்வாணமாக நடமாடும் கடற்கரைகள் /

முகாம்கள் போன்ற குறிப்பிட்ட இடங்களைத் தவிர). திறந்திருப் பதற்கான தடை இருப்பதனால் பெண்கள் தங்கள் மார்பகங்களை மறைப்பதற்குப் பலவந்தப்படுத்தப் படுகின்றார்கள் என்று எவரும் வாதாடுவதில்லை. அநேகமான பெண்கள் ஆடைகள் அணிந்து கொள்ளும் போது, மார்பகங்களை மறைத்துக் கொள்வதை தாமாகவே தெரிவு செய்து கொள்கின்றார்கள். ஹிஜாபுடைய நிலையும் இதுதான். முஸ்லிம் சமூகங்களில் கலாச்சார ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆடையாகும் இது. இதனை ஏற்றுக்கொள் வதை முஸ்லிம் பெண்கள் தேர்வு செய்து கொள்ளலாம். நிச்சய மாக எனது வாதம் உண்மையான தெரிவுக்கு இடமளிக்கின்ற முஸ்லிம் சமூகங்களுக்கே பொருந்தும். அன்றி, மறைக்காதிருத் தலைச் சட்ட ரீதியாகத் தடுக்கின்ற ஈரான் அல்லது தலிபான்களின் ஆப்கானிஸ்தான் போன்ற இடங்களுக்குப் பொருந்துவதல்ல. மேலும் முஸ்லிம் உலகில் சமூக அமைதியின்மை காணப்படும் இடங்களில் விசுவாசப் பிரமாணத்தின் அடிப்படையாக மறைத் தல் கொள்ளப்பட்டு மறைக்காதோர் துயர் உறுத்தப்படும் சந்தர்ப் பங்களுக்கும் இது பொருந்துவதல்ல. பெண்களுக்கு எதிரான இத்தகைய வன்முறைகள் ஏற்றுக்கொள்ள முடியாதன. ஹிஜாபை ஏற்று அணிந்து கொள்ள அல்லது எற்காது விட எங்கு உண்மை யான சுதந்திரம் இருக்கின்றதோ அந்த சமூகங்களில் ஹிஜாபின் தேர்வு குறித்தே நான் கருத்துத் தெரிவிக்கின்றேன்.

**ஊ. ஹிஜாபும் மத உணர்வுடைமையும்**

மத ரீதியான அதன் உறுதிப்பாட்டின் காரணமாகவும், முன் னம் நாம் கண்டது போல இறையச்சம் (தக்வா) சம்பந்தப்பட்ட காரணங்களுக்காகவும் ஒரு முஸ்லிம் பெண் ஹிஜாப் அணிகின் றமை இஸ்லாமிய நம்பிக்கைக்கு ஒரு நுழை வாயிலாக அமைந்து செயல் படுகின்றது.

இஸ்லாத்தின் போதனைகள், உலகின் ஏனைய பிரதான மதங் களைப் போன்று மறு உலக வாழ்க்கையை வலியுறுத்தி, இவ்வுலக சாதனங்களின் கவர்ச்சியினால் ஈர்க்கப்பட்டு நெறி தவறிச் சென்று விட வேண்டாமென விசுவாசிகளை எச்சரிக்கை செய்கின்றன. மக்களின் உள்ளங்களைக் குர்ஆன், கேள்வி கணக்குக் கேட்கப்படும் மறுமை நாளின் பக்கம் ஈர்க்கின்றது. அங்கு ஒவ்வோர் ஆத்மா வினதும் நன்மை தீமைகள் நிறுத்துப் பார்க்கப்படும். இறையச்சம் எமக்கு இடைவிடாது நினைவூட்டப்படுகின்றது. உலகப் பொருட் கள் அத்தனையையும் விடப் பெறுமதி வாய்ந்தது இது.ஆடையும்

இதில் உள்ளடங்கியுள்ளது. ஆக, இறையச்சம் மிக்க ஒரு செய லாகக் கருதி ஹிஜாப் அணிவது, பலமூட்டுவதாக அமைந்தாலும் அது வெறும் ஆரம்ப கட்டமேயாகும். ஸஹீஹ் முஸ்லிமில் ஒரு ஹதீஸ் பதிவாகியுள்ளது: 'அல்லாஹ் உங்களது தோற்றத்தையும் செல்வத்தையும் பார்ப்பதில்லை; உங்களது உள்ளங்களையும் செயல்களையுமே பார்க்கின்றான்.'

இன்னொரு வகையில், மார்க்கத்தின் மீதான பற்றினாலேயே ஹிஜாப் அணியப்படுகின்றது எனக் கொண்டால், முதலாளித் துவத்தின் பொருள் முதல் வாதத்தை எதிர்த்து நிற்கவும் முடிகின் றது. மனித உடலின் பூரணத்துவம் குறித்த குர்ஆனின் நிலைப்பாடு எமக்குத் தரும் செய்தி இதுவே. மேற்கில் உணவுக் கோளாறுகளும், உடல் குறித்த அதிருப்திகளும் அளவிலாப் பரிமாணத்தை அடைந்து வருகின்றன. 'ஒருவரின் உடலமைப்பு உட்பட அனைத் தையும் இறைவனே செய்விக்கின்றான்; அவனுடைய நாட்டப் படியே அனைத்தும் நடக்கின்றன' என நம்பாத ஒரு கலாச்சாரத் திலேயே இது சாத்தியமாகும். உடல் என்பது கலாச்சார நடை முறைகளதும் உருவாக்கங்களதும் தளம் என அமையின் 'உயிரியல் ரீதியான உடல்' என்று ஒன்றில்லை.[53] சத்திர சிகிச்சை மூலமாகவே அன்றி ஒருவர் தனது உடல் கட்டமைப்பை அதிகமாக மாற்றி யமைத்து விட முடியாது என்பதும் உண்மையாகும்.

ஆரோக்கியத்தின் வரையறைக்குள் இருக்கும் ஒருவர் போஷனக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கலாம்; உடற் பயிற்சி கள் செய்யலாம். என்றாலும் உடம்பைச் செம்மைப் படுத்துவதற் கும் ஓர் அளவு இருக்கவே செய்கின்றது. உடல் குறித்த திருப்தியும் மகிழ்வும் கொண்டோராக மானுடர் இருக்க வேண்டும் என்பது குர்ஆனின் செய்தி. 'அவன் தான் கர்ப்பக் கோளறைகளில் தான் விரும்பியவாறு உங்களை வடிவமைக்கின்றான்' (3:6). இன்னும், 'திடமாக நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத் தோம்' (95:4). மக்களை ஆரோக்கியமாக இருக்கும் படியும், அள வாக உண்ணும் படியும், நிதானத்தைக் கடைப்பிடிக்கும் படியும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அடிக்கடி அறிவுரை பகன் றார்கள்.

இவ்வாறு முதலாளித்துவத்தின் பொருள் முதல் வாதத்திற்கு முரணாக இஸ்லாம் செயல்படுகின்றது. ஹிஜாபைக் கடைப்பிடிப் பதனால் முஸ்லிம் பெண்கள் பொருள் முதல் வாத்தின் அரித் தழிக்கும் விளைவுகளை எதிர்த்துப் போராடுவதற்கான,

அனுகூலமான உடல் வளங்களைத் தருகின்ற, ஆழமான விசுவாச பாரம்பர்யத்தை ஈட்டிக் கொள்கின்றார்கள்.

பெண்களின் சுய கௌரவம், மற்றும் உடல் நலன் என்பவற்றின் மீது சீரழிவான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்ற இருபத்தி யோராம் நூற்றாண்டின் முதலாளித்துவ நுகர்வுக் கலாச்சாரத்தின் அழகுக் கலை ஆட்டத்தைத் தாக்குப் பிடிக்கும் அதிகாரமிக்க சாதனமாக ஹிஜாப் செயல்படுகின்றது. ஹிஜாப் என்பது மார்க்க ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதோர் ஆடை யாகும். அதனை அணிபவர்களுக்கு நம்பிக்கையெனும் பாரம்பர் யத்தின் வாயிலை அது திறந்து விடுகின்றது. அதன் பெறுமதி, தோற்றங்களை அடிப்படையாகக் கொண்டதல்ல; பயபக்தி மிக்க செயல்களே அதன் அடிப்படையாக அமைந்துள்ளன என்பதை நினைவூட்டுதல் மூலம் அவர்களின் சுய கௌரவத்தை அது மேலோங்கச் செய்கின்றது. ஆக, ஹிஜாப் ஆனது, பெண்களைப் பாலியல் சின்னங்களாகவன்றி மாண்புகள் மிக்க மனிதப் பிறவி களாக எடுத்துக் காட்டும் மதச் சின்னமாகப் பரிணமிக்கின்றது. ‘இஸ்லாம் பெண்களைப் பாலியல் பொருளாகவே பார்க்கின்றது; முழுமையாக மூடி மறைத்திருக்கப்பட வேண்டியவள் அவள்; பெண் என்ற வகையில் அவள் தாழ்ந்தவளாகவே கருதப்படு கின்றாள். அவளுடைய முக்கியமான பண்பு, சமூக ஒழுங்குக்கு அச்சுறுத்தலாக இருக்கும் அவளுடைய பாலியல் தன்மையாகும்’ என்ற பொதுவான பெண்ணிய கருத்துகளுக்கு இதுவே சரியான எதிர் பாடமாகும்.

## முடிவுரை

*மத சார்பற்ற, தாராளப் போக்குடைய சமூகத்தில் வாழ்ந்தவள் நான். தனி மனிதர்கள் நல்லவற்றைப் பின்பற்றுவதனைப் பொறுத்து நடு நிலையான போக்கைக் கொண்டிருப்பதென கருதப் படும் சமூகம் அது. என்றாலும் நான் ஒரு முஸ்லிமாக மாறியதையும், ஹிஜாபை ஏற்றுக் கொண்டதையும் ஏன் இவர்கள் ஆழ்ந்த காழ்ப் புணர்வுகளுடன் நோக்கினார்கள் என்பதை விளங்கிக் கொள்ளும் ஒரு முயற்சியாகவே இந்த நூலை நான் எழுத ஆரம்பித்தேன். எனது தேடலுக்கான பயணம் முதன் முதல் ஐரோப்பியர்கள் ஹிஜாபை எதிர் கொண்ட காலத்துடன் தொடங்கியது. ஹிஜா பைக் கைவிட்டு, பின்னர் மீளவும் சில மாதர்கள் ஹிஜாபைத் தேர்ந்து கொண்டுள்ள சமகாலம் வரை அப்பயணம் என்னை இழுத்துச் சென்றுள்ளது. டொரொண்டோ நகரில் தம்மை மறைத் துக் கொள்ளும் சில பெண்களின் கருத்துக்களை நான் பதிவு செய் துள்ளேன். அத்துடன் ஹிஜாபை முற்றாகவே எதிர்த்து நிற்கும் ஒரு பெண்ணின் அழுத்தமான கருத்துகளையும் பகுப்பாய்வு செய் திருக்கின்றேன். இறுதியாக இருபத்தோராம் நூற்றாண்டின் முதலாளித்துவ கலாச்சாரங்களுக்கு ஹிஜாப் பற்றிய கருத்துப் படிவமொன்றனை முன்வைக்க முயற்சித்துள்ளேன்.*

*ஹிஜாப் என்பது ஆண் - பெண் ஆடைகளைப் பற்றிய ஒரு தத்துவம்; ஆண் - பெண் தொடர்புகளுக்கான ஒரு பண்பாடு. எவ்வாறாயினும், இது பெண்களின் உடம்பைப் பல்வேறுபட்ட தரங்களில் மறைக்க உதவும் ஒரு துணித்துண்டாகும். மேற்கில் எதிர்ப்பலைகளைச் சந்திப்பது இது. முஸ்லிம் உலகிலும் கசப்பான உணர்வலைகளைக் கிளப்புவது. நவீனத்துவம் என்ற பெயரில், ஹிஜாபைத் தடை செய்யும் சட்டங்கள் இயற்றப்பட்டமையை நாம் துருக்கியிலும், டூனீசியாவிலும் காண முடிந்தது. நவீனத்துவம் எனக் கொள்ளப்பட்டது, இஸ்லாம் பிற்போக்கானது, நாகரிகத் துக்கு முரணானது, காட்டுமிராண்டித் தனமானது, பெண்களைக் கொடுமைப்படுத்துவது முதலாய கீழைத்தேயவியல் கருத்துகளின் அடிப்படையில் உருவானது. இந்த இடத்தில் ஹிஜாப் அடக்கி யாள்வது என்ற பரவலான மேற்குலகக் கருத்தும், முஸ்லிம் உலகில் ஹிஜாபை அகற்றும் முனைவுகளும் ஒன்றிணைகின்றன.*

*இதுவரையில் பெண்மைத்துவ கருத்துகள், ஹிஜாப் அணியும் பெண்கள் அனுபவித்து வரும் அனுகூலங்கள் குறித்து எவ்வித*

அக்கறையும் காட்டுவதாக இல்லை; உலக முழுவதும் பரந்து காணப்படும் மறைத்தல் பற்றிய பலதரப்பட்ட நன்மைகளைக் கருத்தில் கொண்டதாகவும் இல்லை. தன் முனைப்பு மிகுந்து விளங்கும் கீழைத்தேயவியல் பெண்ணியலாளர் உரையாடல்கள், ஹிஜாப் அணியும் பெண்களை, மௌன பொம்மைகளாகவும், தமது ஹிஜாப் எவ்வாறாயினும், தமக்குத் தாமே குரலெழுப்ப இயலாதவர்களாகவுமே சித்தரித்து வந்துள்ளன. மேற்கத்திய பெண்ணியலாயர்கள், தமது சொந்த கலாச்சாரத்தில் பெண்கள் அனுபவித்து வரும் அடக்கு முறைகளுக்கெல்லாம் குருடானவர் களாகி, உலகில் இன்னமும் அடக்கு முறைக்கு ஆளாகியிருப்போர் முஸ்லிம் பெண்கள் மாத்திரமே எனக் குரல் எழுப்பி வருகின் றார்கள்.

ஹிஜாப் அடக்கியாள்வது என்ற பல்லவியின் பின்னாலிருக்கும் அரசியலின் பங்கும் அவதானிக்கப்பட வேண்டியதோர் அம்சம். ஹிஜாபுக்கு எதிரான பிரச்சாரம், பல வழிகளிலும் மேற்குலக மேலாதிக்கத் திட்டத்துடன் தொடர்புடையதாகவே இருக்கின்றது. குறிப்பிட்ட எந்த ஒரு வெளிநாட்டுக் கொள்கையுடனும் தொடர்பு படாமல் இயல்பாக அமைந்ததாகவே தோற்றம் பெற்றாலும் கூட, அந்த மேலாதிக்கம் இதன் பின்னணியில் அரசோச்சுவதைக் கண்டு கொள்ளலாம்.

சிலர் காட்டும் எதிர்ப்பு சரியானதே. பல முஸ்லிம் சமூகங்களில் பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள்; தம்மை மறைத்துக்கொள்ள அவர்கள் பலவந்தப்படுத்தப்பட்டுள்ளார்கள்; பெண்களின் சுய திறன்களைக் கட்டுப்படுத்தவும் அவர்களது கல்வி, தொழில் வாய்ப்பு, வாக்குரிமை முதலானவற்றை மறுத்துரைக்கவும் கையாளப்படும் யுக்திகளின் ஒரு சாதனமாகவே ஹிஜாப் அணி விக்கப்படுகிறது.

மெர்னிஸி போன்று பல முஸ்லிம் பெண்கள் ஹிஜாபுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதும்,ஹிஜாபின் மறைவில் மகிழ்ச்சி காண்பதும் வியப்புக்குரிய விடயங்களல்ல. தம்மை மறைத்துக் கொள்ளும் மீள்-இயக்கமானது, மேற்குலகத்து அடக்கு முறைக்கும் சில பாரம்பர்ய முஸ்லிம் கலாச்சார நடைமுறைகளுக்கும் தீவிர சவாலாக அமைந்திருப்பது கண்கூடு.

குர்ஆன் - ஸுன்னாவின் பக்கல் மீண்டு கொள்ளும் இயக்கங்

கள், தம்முள் பல்வேறுபட்ட உந்து சக்திகளைக் கொண்டுள்ளன. குர்ஆனும், ஸுன்னாவும், ஆரம்ப முஸ்லிம் சமூகமும் ஆண்கள் - பெண்களுக்கிடையில் சமத்துவத்தையும் நீதியையும் நிலை நிறுத்தின என்றே இவ்வியக்கங்கள் கருதுகின்றன. அதனை ஆமோதிப்பவளாகவே நானும் இருக்கின்றேன். என்றாலும் கடந்த 1400 வருட காலக் கலாச்சாரப் பெருக்கத்தின் காரணமாக, ஆரம்ப முஸ்லிம் வாழ்வமைப்பு திரிபுபட்டதாகிவிட்டது. மீள்-மறைவு செய்வதனை ஆதரித்துச் செயல்படும் ஆண்களும், பெண்களும் கூறுவதென்ன? சமூக விவகாரங்களில் பெண்கள் தமது சரியான பங்குபற்றுதலில் இருந்தும் ஒதுக்கப்படுவதும், புறக்கணிக்கப்படு வதும் ஒறுக்கப்பட வேண்டும்; அதற்காக அவர்கள் கல்வியூட் டப்பட வேண்டும், சமூக அரசியல் விவகாரங்களில் பங்குபற்ற வசதிகள் செய்யப்பட வேண்டும் என்றே அவர்கள் கூறு கின்றார்கள். இவை அனைத்துடனும் அவர்கள் வேண்டுவது ஹிஜாப்.

ஹிஜாப் பற்றிய இந்த கருத்து வேறுபாடுகள் இன்றைய முஸ்லிம் சமூகத்தில் மேலோங்கி நிற்க இடமளித்தல் தகாது. இஸ் லாத்தின் ஆரம்ப கால கட்டங்களில் கருத்து வேறுபாடுகளானது விசேஷத்துவம் பெற்ற ஓர் அம்சமாக விளங்கியது. ஹிஜாப் ஆனது ஒரு பெண்ணை முஸ்லிமாக அல்லது முஸ்லிமல்லாதவராக ஆக்கி வைக்கும் சாதனம் என்ற ரீதியிலேயே தற்போது அனாவசியமாகத் தம் மனத்தை அவஸ்தைகளுக்கு உள்ளாக்கிக் கொள்கின்றார்கள்.

ஒருவரை முஸ்லிமாக்குவது ஷஹாதா (அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை; முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதராக இருப்பார்கள் எனப் பிரகடனம் செய்து ஏற்றுக் கொள்வது)வே என்பதும், அதற்கு அடுத்த முக்கிய கடமை தினமும் ஐவேளை தொழுகையைக் கடைப்பிடிப்பதாகும் என்பதும் மறக்கப்பட்டு விடுகின்றது. மார்க்கக் கடமைகளைச் சரிவரக் கடைப்பிடித்து வாழும் மாதர்கள் கூட, பயனிலாதன பேசிக் காலங்கடத்துவராயின் மறுமையில் தண்டனைக்காளாக லாம் என நபி மொழிகள் எமக்கு உணர்த்துகின்றன. ஒருவரது செயல்களது தன்மைகளும் அளவும் நாம் வருந்துமளவு எம் முடையதல்ல. இன்னொரு பெண் எவ்வாறு ஆடை அணிந்திருக் கின்றாள் என்பதை விட, எமது கவனமும் கரிசனையும் எமது நடத்தையும் செயல்களும் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதைப் பற்றியதாக இருக்க வேண்டும். ஆக பழைமை பேண்

சார்பினர், ஹிஜாப் அணிய விரும்பாதோரைக் கண்டனம் செய்யும் அகங்காரங்களைக் களைந்து விட வேண்டும். அது போலவே முற்போக்கு எண்ணச் சார்பினர், ஹிஜாப் அணிய விரும்புவோரைக் கண்டிப்பதிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும். அனைத்துக்கும் மேலாக இரு சாராரும் மனச்சாட்சியின் சுதந்திரத்தை மதித்து நடத்தல் வேண்டும்.

நான் எனது ஆய்வை மேற்கொண்டதிலிருந்து முஸ்லிம்கள் மத்தியில் ஹிஜாபானது மார்க்க ரீதியாக விதி செய்யப்பட்ட ஓர் ஆடையல்ல; மாறாக கலாச்சார ரீதியாக அமைந்ததொன்றே அது என்ற வகையில் ஒரு சர்ச்சை எழுந்தது. இஸ்லாத்தைத் தழுவ நான் நாடியிருந்ததன் காரணமாக இச்சர்ச்சை குறித்து ஆராய்ந்து பார்க்க முனைந்தேன். பலவீனமான சான்றுகளையும், பொருத்தமில்லாத தர்க்கங்களையுமே இந்த வாதம் கொண்டிருந்தமையை நான் கண்டேன். 'ஹிஜாப் மார்க்க ரீதியான ஒரு கடப்பாடு அல்ல' என்ற கருத்து பரவலாகிப் பெருகி வருகின்றமையும், மேற்குலகில் இதற்கான ஆதரவு பெருகி வருகின்றமையும் என்னுள் பெரும் ஆதங்கத்தை ஏற்படுத்துகின்றது. இது, ஹிஜாப் அணிய அல்லது தலையை மறைத்துக்கொள்ளவென முடிவெடுக்கும் பெண்களை வேறெப்போதையும் விட ஓரங்கட்டி விடலாம் என நான் கருதுகின்றேன். மேற்கத்திய கலாச்சார கருத்துப் பரிமாற்றங்களும், முற்போக்கு முஸ்லிம் உரையாடல்களும் இவர்களது குரல்களை ஒடுக்கி விட்டுள்ளன. இந்த நூலுக்காகப் பேட்டி காணப்பட்ட அனைவருமே ஹிஜாப் அணிந்தவர்களல்லாவிடினும் பெரும்பாலானவர்கள் அணிபவர்களாயிருந்தார்கள். ஹிஜாப் மார்க்க ரீதியாக நியமம் செய்யப்பட்ட ஓர் ஆடை; அது அடக்கியாள்வதல்ல; முஸ்லிம் பெண்களுக்கு கண்ணியத்தையும் மரியாதையையும் ஈட்டி வைப்பது என்பதுவே இந்த நூலின் முழுக் கட்டமைப்பும்.

ஹிஜாப் பாற்றிய வாதப் பிரதிவாதங்களில் எனது இந்த முயற்சி ஒரு மாற்றுக் கண்ணோட்டத்தை வழங்கும் என நம்பலாம். எனது நூல் ஹிஜாப் பற்றிய மற்றொரு கதையை சொல்வதான முயற்சியாகவும் இருக்கலாம். அந்தக் கதை, என்னைப் போன்று இஸ்லாத்தில் இன்பத்தையும் அமைதியையும் காண்பவர்களது கதை. இஸ்லாம் பெண்களைக் கொடுமைப்படுத்துவதல்ல; ஹிஜாப் அவர்களை ஒடுக்குவதல்ல என நம்புபவர்களது கதை. செவி மடுக்க விரும்புபவர்களுடன் ஒரு தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்

ளும் ஒரு முயற்சி இது. ஹிஜாபை அணிவதில் இன்பம் காணும் பெண்கள் கண்ணியமாக நடாத்தப்பட வேண்டும்; அவர்களது கருத்துகள் கருணையுடன் செவிமடுக்கப்பட வேண்டும்; வாதாட்டங்கள் நன்மைகளை ஈட்டிக் கொள்ளும் வண்ணம் நடாத்தப்பட வேண்டும். சில விடயங்களில் நாம் வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொள்வதற்கு இணங்கலாம். ஆகக் குறைந்தது, நாம் வேறுபட்ட கருத்தினர்களாயிருப்பினும், இந்தப் பூகோள கிராமத்தில் பங்குதாரிகளாக விளங்கலாம்.

## குறிப்புகள்:

1 *The Complete Letters of Lady Mary Wortley Montagu*, quoted in Leila Ahmed, *Women and Gender in Islam: Historical Roots of a Modern Debate* (New Haven: Yale University Press, 1992), p.150.

2 Orientalism became a field of knowledge, or paradigm, for understanding the Middle East and Islam that pretended to objectivity (impartiality), but that was actually based on the guiding assumption of inherent Oriental inferiority. Edward Said, *Orientalism* (1979, 2nd Ed., New York: Vintage Books,1994), p.209.

3 Ahmed, *Women and Gender in Islam*, p.128.

4 Ibid., pp.129-30.

5 Ibid., p.145.

6 Ibid., p.129.

7 Timothy Mitchell, *Colonising Egypt* (Berkeley: Uni. of California Press,1988), pp.12-13, passim.

8 Ibid., pp.19-20.

9 Ahmed, *Women and Gender in Islam*, p.104.

10 The Quebec issue followed on from French expulsions of girls in hijab in 1989. Naturally there are connections between French and Quebec culture.

11 Canadian Broadcasting Commission, Prime Time News, July, 1995.

12 Jeffery Simpson, "The Current Objections to Muslim Clothing are Simply Wrongheaded," *Globe and Mail* (Toronto, Canada), December 28, 1994, p. A16.

13 Mona LeBlanc, Letters to the Editor, *Globe and Mail,* Wednesday, January 4, 1995.

14 I say "other people" because most of the interviewees, even though they observed the five pillars of Islam, did not consider themselves "religious." They felt they would have to do more prayers, or read more Qur'an, to be truly religious.

15 Yvonne Yazbeck Haddad, "Arab Muslims and Islamic Institutions in America: Adaptation and Reform," in *Arabs in the New World: Studies on Arab-American Communities*, eds. Sameer Y. Abraham and Nabeel Abraham (Detroit: Wayne State University Centre for Urban Studies, 1983), p.75.

16 Azza M. Karam, *Women, Islamisms and the State: Contemporary Feminisms in Egypt* (London: Macmillan, 1998), p.133.

17 Ibid., p.139.

18 For Algeria, see Frantz Fanon, *A Dying Colonialism*. Trans. Haakon Chevalier (New York: Grove Press, 1967). French edition, 1959, pp.61-62, *passim*. For Iran, see Azar Tabari, "Islam and the Struggle for Emancipation of Iranian Women," in In the *Shadow of Islam: The Women's Movement in Iran*, eds. Azar Tabari and Nahid Yeganeh (London: Zed Press, 1982), p.13.

19 Sherifa Zuhur, *Revealing Reveiling: Islamist Gender Ideology in Contemporary Egypt* (New York: State University of New York Press, 1992), p.108.

20 John Williams, "A Return to the Veil in Egypt," *Middle East Review*, 11, 3, (1979), p.50.

21 Zuhur, *Revealing Reveiling*, p.2. Zuhur found this ideal contradicted by the Yves St. Laurent line of headscarves available for purchase. See also Leila Hessini, "Wearing the Hijab in Contemporary Morocco: Choice and Identity," in *Reconstructing Gender in the Middle East: Tradition, Identity, and Power*, eds. Fatma Müge Göçek and Shiva Balaghi (New York: Columbia University Press, 1994), p.50.

22 Williams, "A Return to the Veil," p.54.

23 Homa Hoodfar, "Return to the Veil: Personal Strategy and Public Participation in Egypt," in W*orking Women: International Perspectives on Labour and Gender Relations,* eds. Nanneke Redclift and M. Thea Sinclair (London: Routledge, 1991), pp.110-111; Arlene Elowe Macleod, *Accommodating Protest: Working Women and the New Veiling in Cairo* (New York: Columbia University Press, 1991), pp.114, 121.

24 Helen Watson, "Women and the Veil: Personal Responses to Global Process," in *Islam, Globalization and Postmodernity*, eds. Akbar S. Ahmed and Hastings Donnan (London: Routledge, 1994), p.148. Nadia is the first woman in the family to have a post-secondary education. She is now studying medicine at University.

25 M. AlMunajjed, *Women in Saudi Arabia Today* (New York: St. Martin's Press,1997), p.47.

26 *New Statesman*, 27 March 1992, cover page.

27 *The Atlanta Journal/The Atlanta Constitution*, June 28, 1992, Section P.

28 *L'Express*, (Quebec), November 17, 1994, cover page.

29 *Le Nouvel Observateur*, September 28, 1994.

30 *Toronto Star*, May 14, 1996, F5.

31 *Vancouver Sun*, September 15, 1994, A18.

32 *Montreal Gazette*, April 11, 1994, B3.

33 *Toronto Star*, December 15, 1996, F4.

34 Deborah Scroggins, "Women of the Veil: Islamic Militants Pushing Women Back to an Age of Official Servitude," *The Atlanta Journal/The Atlanta Constitution*, Sunday, June 28, 1992, p.P3.

35 Jan Goodwin, *Price of Honor: Muslim Women Lift the Veil of Silence on the Islamic World*, (New York: Plume, 1994), p.262.

36 Ibid., pp.55, 78-9, 81, 98, 101, 107-9, 293, 300; Scroggins, "Women of the Veil," p.p3

37 Goodwin, *Price of Honor*, pp.112, 161, 186-7, 217, 247, 342. Goodwin presents some women who cover as not fundamentalists and fearing fundamentalism, p.85; Scroggins, "*Women of the Veil*," p.P2. Geraldine Brooks, *Nine Parts of Desire: The Hidden World of Islamic Women*, (N.Y.: Doubleday, 1995), p.8.

38 Goodwin, *Price of Honor*, pp.137, 175.

39 Andrea B. Rugh, *Reveal and Conceal: Dress in Contemporary Egypt* (Syracuse, New York: Syracuse University Press, 1986).

40 S. Brenner, "Reconstructing Self and Society: Javanese Muslim Women and the Veil," *American Ethnologist*, 23, 4, (1996).

41 Fatima Mernissi, *Beyond the Veil: Male-Female Dynamics in Modern Muslim Society* (Revised ed, Indiana: Indiana University Press, 1987), and *The Veil and the Male Elite: A Feminist Interpretation of Women's Rights in Islam*, Trans. Mary Jo Lakeland (Reading, Massachusetts: Addison-Wesley Publishing Co., 1991).

42 Fatima Mernissi, *Dreams of Trespass: Tales of a Harem Girlhood* (Reading, Massachusetts: Addison-Wesley Publishing Co., 1994), p.100.

43 Ibid.

44 Mernissi, *Beyond the Veil*, p.82.

45 Ibid.

46 T.J. Winter, "Desire and Decency in the Islamic Tradition," *Islamica* (United Kingdom), 1, 4, (January 1994), pp.11-12.

47 Mernissi, *Beyond the Veil*, p.107.

48 Naheed Mustapha, "My Body is my Own Business," *Globe and Mail*, Facts and Arguments, Tuesday, June 29, 1993; Yusufali: "My Body is My Own Business," *The Toronto Star*, Tuesday, February 17,1998, C:1.

49 Susie Orbach, *Fat is a Feminist Issue: A Self-Help Guide for Compulsive Eaters* (New York: Berkeley Books, 1979); Susan Bordo, *Unbearable Weight: Feminism, Western Culture, and the Body* (Berkeley, Calif.: University of California Press, 1993); Naomi Wolf, *The Beauty Myth: How Images of Beauty are Used Against Women* (1991, 2nd Ed, New York: Anchor, 1992);

J ane Ussher, *Fantasies of Femininity: Reframing the Boundaries of Sex* (London: Penguin, 1997); Catherine A. MacKinnon, "Sexuality, Pornography, and Method: Pleasure Under Patriarchy," in *Feminism and Philosophy: Essential Readings in Theory, Reinterpretation, and Application*, eds. Nancy Tuana and Rosemarie Tong (Boulder: Westview Press, 1995); A. Dworkin, "Pornography is a Civil Rights Issue," in *Debating Sexual Correctness: Pornography, Sexual Harassment, Date Rape, and the Politics of Sexual Equality*, ed. Adele M. Stan (New York: Delta, 1995).

50 John Berger, Sven Blomberg, Chris Fox, Michael Dibb and Richard Hollis, *Ways of Seeing* (London: BBC and Penguin, 1972).

51 MacKinnon, "Sexuality, Pornography, and Method," p.142.

52 Michael F. Jacobson and Laurie Ann Mazur, *Marketing Madness: A Survival Guide for a Consumer Society* (Boulder: Westview Press, 1995), pp.84-5.

53 Bordo, *Unbearable Weight*, p.290. Also pp.246-7, 275.



Katherine Bullock கனடாவின் டொரொண்டோ பல்கலைக்கழகத்தில் 1999 ஆம் ஆண்டு Political Science துறையில் கலாநிதி கற்கை நெறியைப் பூர்த்தி செய்தார். கலிபோர்னியாவிலும் டொரொண்டோவிலும் அரசியல், இஸ்லாமிய நாகரிகம் ஆகிய துறைகளில் கற்பித்தும் விரிவுரைகள் நிகழ்த்தியும் வந்துள்ள இவர், 2002 ஆம் ஆண்டு முதல் டொரொண்டோ பல்கலைக் கழகத்தில் Politics of Islam எனும் கற்கை நெறியை நடாத்தி வருகின்றார்.

IIIT வெளியிட்டு வரும் American Journal of Islamic Social Sciences சஞ்சிகையின் 2003-2008 கால ஆசிரியர்; Association of Muslim Social Scientists (North America) அமைப்பின் 2006-2009 காலப்பகுதியின் துணைத் தலைவர். இவரது தாயகம் அவுஸ்திரேலியா. கணவர், குழந்தைகளுடன் கனடாவில் வசித்து வருகிறார். Dr. Katherine Bullock 1994 ஆம் ஆண்டு இஸ்லாத்தைத் தழுவினார்.




Published by
**Fuzin Texts**
23/3 Market Road,
Dharga Town 12090
Sri-Lanka.

ISBN 978-955-8398-27-2